www.tamilarangam.net

"SUVADUKAL" - A Tamil monthly from Norway - februar 1991



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- சு.முரளி -



முதன்முறையாக 'நோர்டிக் ரோட்ஸ்' இலக்கியத்துக்கான பரிசு வடநோர்வேயில் வாழும் சிறுபான்மை இனத்தவரான சாமிஸ்க் இனத்தவர்க்கு கிடைத்துள்ளது. இந்தப் பெருமையை 'ஆயிரம் கலைத்திறமை' கொண்ட (இவ்வாறுதான் நோர்வே பத்திரிகைகள் வர்ணிக்கின்றன) நிர்ஸ் அஸ்லாக் வால்கப்பா தட்டிக் கொண்டார். இவர் ஒரு இலக்கியவாதி மட்டுமல்ல, தனது திறமையை இசை, ஓவியம், புகைப்படக்கலை ஆகியவற்றில் பதித்தவர். இவரே இன்று சாமிஸ்க் இனத்தவர்க்கான உலகத் தூதுவராகத் திகழ்கிறார்.

இம்முறை நோர்டிக் இலக்கியப் பரிசுக்கு பலத்த போட்டி நிலவியது. நில்ஸ் அஸ்லாக்கின் 'சூரியன், எனது தந்தை' (solen, min far) எனும் நூலே பரிசைத் தட்டிக்கொண்டது. இந்நூலில் அவர் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் விவரண வகையிலும் கற்பனாவாதப் பாணியிலும் இணைத்துள்ளார். இவ்வாறான பாணி முன்னர் பரிசீலிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

நோர்டிக் இலக்கியப் பரிசாக ஒன்றரை இலட்சம் டானிஷ் குரோணர்கள் இவருக்கு வழங்கப்பட்டது.

"நான் செய்வதை, நேரடியாக எனது மக்களுக்குச் செய்கிறேன்" எனப் பிரகடனப் படுத்தும் இவர், "எனது படைப்புகள்பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என நான் அதிகம் சிந்திப்பதில்லை" என்கிறார். இவர் மூன்று நாடுகளில் வசிப்பவர். பின்லாந்து, சுவீடன், நோர்வே ஆகியவற்றின் எல்லைப் பகுதியிலுள்ள பெட்டிக்கா எனும் இடத்தில் வாழ்கிறார். பின்லாந்து குடியுரிமையையே கொண்டுள்ளார். இயற்கையை மிகவும் நேசிக்கும் நில்ஸ், இயற்கையோடு ஒன்றிய சூழலிலேயே வாழ்கிறார்.

இவருடைய 'Helsing fra sameland' எனும் நூல் 1971இல் வெளிவந்தது. பெரும் சர்ச்சைக்குள்ளான இந்நூலின் நொர்ஷ்க் மொழிபெயர்ப்பு 7வருடங்களின்பின் வந்தது. இதுவரை இவரது மூன்று கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன.

இவர் உண்மையில் ஆசிரியப் பயிற்சி பெற்றவர், எனினும் ஒருபோதும் ஆசிரியராக கடமையாற்றியதில்லை. நில்சின் இசையும் பாடல்களும் பிரபலமானவை. இருவருடங்களுக்கு முன்னதாக வெளிவந்த 'வைவீசரண்' எனும் திரைப்படத்தின் இசையமைப்பாளர் இவரே. இப்படத்தில் அவர் நடித்தும் உள்ளார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈஸ்வரி நீண்டதொரு பெருமூச்சு விடவும்- வீடுவீடாகச் சுண்ணாம்பு விக்கிற சுண்ணாம்புக்காரி வாசலிலை வந்து நிண்டு "அம்மா சுண்ணாம்பு" எண்டு கத்தவும் சரியாக இருந்தது.

"எங்களுக்கு இனிச் சுண்ணாம்பு வேண்டாம் அருளண்ணையும் இனி இஞ்சாலைப் பக்கம் வராது" எண்டு சொல்லிவிட்டு ஈஸ்வரி றூமைவிட்டு வெளியேறினாள். ரகுநாதன் முகட்டைப் பாத்துக்கொண்டு கொஞ்சநேரம் இருந்துவிட்டு ஒரு சிகரெட்டை எடுத்து ஊதத் தொடங்கினான்.

'கொயிலடிப்பக்கம் ஒரு உலாத்து உலாத்திவிட்டு வந்து படுத்தா நல்லாயிருக்கும்' சேட்டை மாட்டிக்கொண்டு கிளம்பினான். அவ்வளவு பெரிய இருட்டில்லை. இதமான காற்று முகத்திலை பட நல்லாயிருக்கு. சிலநேரத்திலை இரவிலை பறக்கிற காக்கைகளின் இறகசைப்பொலி ஒரு தாலாட்டு மாதிரி நல்லாயிருக்கும். அதுகளுக்கு இரவிலை என்னவேலை? அதுகளுக்கு இந்த restless எங்கை இருந்து வந்தது? ஒருவேளை எங்களைவிட அயிரம் மனச்சுமைகளையும்... பசுமையான நினைவுகளையும்... மறக்க முடியாமல் இறக்கிவைக்க ஏதுமில்லாமல் பறந்து திரியும் தேடல் பறவைகள்தானோ அவையும். ஒரு குயிலைப் பிடிச்சு அதுக்கு விளங்கக்கூடிய பாஷையில நீ உண்மையில கூவுகிறாய்தானா? பாடுகிறாய்தானா? அல்லது உன்மன வக்கரிப்புகளைக் கொட்டித் தீர்க்கிறாய்தானா? எண்டு கேக்க வேணும். குயில் ஒரு நல்ல பறவை. ஆற்றையேன் வீட்டிலை முட்டையிட்டுவிட்டு பறந்துபோய்விடும். அதற்கு வீடே கட்டத் தெரியாதாம். ஆச்சிதான் சொன்னவ. தனது சொந்தச் சுமையைக்கூட ஆற்றையேன் தலையிலை கட்டிவைக்கிற மனப்பக்குவம் அதுக்கு இருக்கிறதாலையோ என்னவோ அதனால சுதந்திரமாகப் பாடமுடியுது. நானும் ஒரு கலியாணத்தை அம்மாவுக்காக முடித்துவிட்டு என் சொந்தச் சுமையை மனைவியின் தலையிலை கட்டிவைச்சிட்டு... மனைவிச் சுமையை 'தாலி' எண்ட சமூகக் கருத்திலை கட்டிவைச்சிட்டு பாட்டுப் பாடிக் கொட்டு திரியலாம். குயில் பாடுவது இனிமையெண்டால்- இந்தக் குயிலின் பாடலும் இனிக்குந்தான். நாளைக்கு வேலை முடிஞ்சு வரேக்கை வை.சி.சுருட்டுக் கடையிலை போய் நாலைஞ்சு நல்ல சுண்ணாம்புப் பேணி வாங்கிக் கொண்டந்து அம்மாட்டைக் குடுக்கவேணும்.

(தொடரும்)

---

* ஐரோப்பாவிலுள்ள தனது படைகளில் 40,000 பேரைத் திருப்பி அழைக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. கிழக்கு- மேற்கு உறவுகள், பாதுகாப்பு நிதிக்குறைப்பு போன்ற காரணங்களால் தற்போது ஐரோப்பாவிலுள்ள 3லட்சம் துருப்புகளில் ஒருபகுதியை அமெரிக்கா அடுத்த 12மாதங்களில் திருப்பி அழைக்கும். மேற்கு ஜேர்மனியில் மாத்திரம் 2லட்சம் அமெரிக்கத் துருப்புகள் நிலைகொண்டுள்ளன. பெரும்பாலான படைவிலகல் ஜேர்மனியிலேயே நிகழவுள்ளது.

அது.

www.tamilarangam.net

இரண்டு மூண்டுநாளா யோசிக்கிறன். அருளண்ணையும் இப்பதான் வந்துட்டுப் போகுது. உன்ரை சாதகத்தையும் ஒருக்கா குடுப்பம் எண்டு யோசிச்சன். எதுக்கும் உன்னட்டை ஒருக்கா கேப்பம் எண்டுதான் வந்தனான்"


பூடகமாக விசயத்தைக் கச்சிதமாகச் சொன்னாள் ஈஸ்வரி.

"அம்மா உங்கடை சிந்தனையில எந்தப் பிழையும் இல்லை. எனக்கும் இனிப் பொறுப்புகள் இல்லைத்தான். ஆனால் அம்மா இன்னும் என்ரைமனம் கலியாணத்துக்குப் பக்குவப் படேலை. Campusஇலை படிக்கேக்கை நான் ஒரு பெட்டையை விரும்பினது உங்களுக்குத் தெரியும். அப்பற்றை ஆத்திரமான கடிதங்களும் உங்களுக்குத் தெரியும். சகோதரங்களுக்காகவும் குடும்பத்துக்காகவும் நான் என்ரை காதலைக் கொஞ்ச நாள் தள்ளிப்போட நிர்ப்பந்திக்கப்பட்டு பிறகு அது ஏதோ ஒரு வடிவத்திலை திசைமாறி நானுங் குழம்பி... அந்தப் பெட்டையையுங் குழப்பி... அது நிறைவேற முடியாமப் போச்சு. சின்ன வயசிலை பள்ளிக்கூடத்திலை நான் மனசுக்கை சுசீலாவை நினைச்சு பள்ளிக்கூடக் காதலாக அது வளர்ந்து பள்ளிக்கூடக் கேற்றோடையே அது முறிஞ்சு போனதும் உங்களுக்குத் தெரியும். இதுகள் என்ரை மனசில ஆழமாகப் பதிஞ்சிட்டுதம்மா. என்ர மனம் இப்ப குடும்பம் குட்டி எண்டதெல்லாம் ஒரு போலி வேஷம் எண்டுதான் நினைக்குதம்மா. நான் இன்னுமொரு பெட்டையின்ரை வாழ்வில குறுக்கிட விரும்பேல்லை. இதாலை உங்கட மனசுக்குக் கஷ்டங் குடுக்கிறன் எண்டு எனக்குத் தெரியும். ஆனால் நான் என்ன செய்யிறது?

மிகுந்த ஆறுதலுடன் சொல்லுச் சொல்லா முகட்டைப் பார்த்தபடி சொன்னான் ரகுநாதன்.



www.tamilarangam.net




# மண்மணம்

## அத்தியாயம் 13

'ஒரு அளவான ஆனால் குறைவில்லாத சீதனத்தோடை இந்திராவுக்கு மாப்பிள்ளை எடுத்துக் கல்யாணங் கட்டிக் கொடுத்தது நான்தானே எண்ட துணிவிலை அருளண்ணை அடிக்கடி வீட்டை வந்துபோகுது. வந்துபோறதிலை ஒண்டுமில்லை. இந்த மனிசனுக்கும் வயசுபோன காலத்திலை பேச்சுத் துணையாயிருக்குந்தான். ஆனா சுண்ணாம்புப் பேணியைத்தான் அடிக்கடி மாத்தவேண்டிக் கிடக்கு. சந்திரா போய் இரண்டு வருஷமாகப் போகுது. அந்தப் பிள்ளை என்னபாடு படுகுதோ தண்ணிவென்னி இல்லாமல் இளைச்சுப் போயிருப்பாள்'

நரம்பு தெரியும் தன்கைகளால் நரைத்த தலைமுடிகளுக்குள் பேன்களைத் தேடினாள் ஈஸ்வரி. வாசலில் ரகுநாதன் வேலைமுடிஞ்சு வந்து சப்பாத்துக் கழட்டுற அசுமாத்தந் தெரிஞ்சுது. மெல்லமாய் எழும்பிப் போய் தண்ணியைச் சுடவைச்சு தேத்தண்ணிக் கிளாசையும் கையில எடுத்துக் கொண்டு ரகுநாதன்ரை roomக்குப் போனாள். சாரத்தைக் கட்டிக்கொண்டு கட்டிலிலை சாடையாய்ச் சாய்ஞ்சு கொண்டிருந்தான் ரகுநாதன். தேத்தண்ணியைக் கையில கொடுத்துட்டு பக்கத்திலை கட்டிலிலை இருந்தாள் ஈஸ்வரி. ரகுநாதன் தாயை அதிசயமாய்ப் பார்த்தான். அவன்ரை றூமுக்கு எப்பொழுதாவது தேவைக்குத்தான் வரும் அவன் தாய், என்றைக்குமே அவனது privacyஐக் குழப்பாத தாய் அருகில் கட்டிலில் அமர்ந்தது அதிசயம் மட்டுமல்ல ஆனந்தமாகவும் இருந்தது.

"நான் ஒரு விசயம் உன்னட்டைச் சொல்லவேணும் தம்பி"

"சொல்லுங்கோவேன் அம்மா! காசேதேன் வேணுமே?"

"ஏன்ரா நீ எங்களுக்குத் தந்தது காணாதே? காசுப் பிரச்சனை இப்ப எங்களுக்கில்லை. உன்னைப்பற்றி இப்ப

www.tamilarangam.net

யுத்தத்துக்கு போதிய காரணமாய் அமைந்தது.

10/01-1815 இல் கண்டியை நோக்கி ஆங்கிலேயப் படைப்பிரிவுகள் கொழும்பு, காலி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இருந்து புறப்பட்டனர். இதில் 2300 சுதேச போர்வீரரும் 1500 ஆங்கிலேயப் படைப்பிரிவும் அடங்கியிருந்தன.

ஆங்கிலேயப் படையெடுப்பை டொயிலி மிகவும் வசீகரமான முறையில் சிங்களத்தில் பிரகடனப்படுத்தினான். சிங்களமக்களை தமிழ்மன்னனிடம் இருந்து மீட்கவும், பௌத்தமதத்தையும் பொதுமக்களின் பொருட்களைப் பாதுகாக்கவும் கண்டிப் பிரமுகர்களின் மதிப்புக்குரிய உத்தியோகங்களை மீள அவர்களுக்கே வழங்குவதாயும் பிரித்தானிய முடியின்கீழ் கண்டிமக்கள் பாதுகாப்புடனும் அமைதியுடனும் வாழலாம் எனப் பிரச்சாரம் செய்தனர்.

ஆங்கிலேயப் படைகள் கண்டிநாட்டைப் பகுதிபகுதியாகப் பிடித்தனர். ஈற்றில் மொலிகொடவும் ஆங்கிலேயரிடம் சரணடைந்தான். 14/02-1815 இல் கண்டி முழுவதுமாகக் கைப்பற்றப்பட்டது. அரசனும் அவனது குடும்பமும் தலைநகரைவிட்டு மெதமகாநுவர என்ற இடத்துக்கு ஓடினார்கள். மன்னனைச் சிறைப்பிடிக்கச் சென்ற படைகள் ஈற்றில் மன்னன் மறைந்திருந்த இடத்தையடைந்து காவற்காரனைக் கட்டிவைத்துவிட்டு கதவையுடைத்து உள்ளே சென்று கிரிண்டிக் கொடிகளால் மன்னனைக் கட்டித் துன்புறுத்தி, இராணிகளின் ஆபரணங்களை பிடுங்கியெடுத்தும் துன்புறுத்தினர். இதைக்கண்டு சகிக்காத படைவீரன் ஒருவன் விபரங்களை டொயிலிக்கு அறிவித்தான். டொயிலி உடனடியாக அரசாங்கத்தின் பெரிய உத்தியோகத்தர்களையும் குதிரைப்படை வீரர்களையும் பல்லாக்குகளையும் பல்லாக்கு சுமப்போரையும் அனுப்பி மன்னனை இராஜமரியாதையுடன் அழைத்து வருமாறு கூறியனுப்பினான்.

மன்னன் இருக்குமிடத்தை அடைந்த அதிகாரிகள் தமது தொப்பிகளைக் கழற்றி மன்னனுக்கு மரியாதை செலுத்தி போதிய உணவு வழங்கி முற்னும் பின்னும் காலாட்படைகள் அணிவகுத்துச் செல்ல இடையில் குதிரைப்படை வாளேந்திச் செல்ல மன்னன் கௌரவமாக இராஜமரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டான். மன்னனின் உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்று கூறிய டொயிலி, மன்னனுக்கு கொழும்பில் வசிப்பதற்கு பெரிய மாளிகையை ஒழுங்குசெய்து கொடுத்தான். தான் விதித்த தண்டனைகள் யாவும் தண்டக்கோவைச் சட்டத்தின்படி அமைந்தது எனக்கூறிய மன்னன், இதில் தனது தவறு எதுவுமில்லை எனக் கூறினான். 24/01-1816இல் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட மன்னன் வேலூரிலுள்ள திப்புசுல்தானின் மகனுடைய அரண்மனையில் இருத்தப்பட்டான். அங்கு நீர்வீக்க நோயால் 30/01-1832 இல் மன்னன் மரணமானான்.

ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றியதும் கண்டியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த சிங்கள மக்களின் 2357ஆண்டு சுதந்திரம் நீங்கியது. கண்டியில் முதன்முதலாக முடிசூடிய மன்னன், இங்கிலாந்து ரியூடர் வம்சத்து 7ஆவது ஹென்றியிலும் முந்தி முடிசூடியவன் என்பது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

இதனைத் தொடர்ந்து மேலதிகாரியாக எகிலப்பொலவும் இரண்டாவது அதிகாரியாக உமாம்புவையும், உமாம்புவின் மரணத்தையடுத்து மொலிகொடையும் நியமிக்கப்பட்டனர். எகிலப்பொலவும் மொலிகொடவும் அரசியலில் ஒருவருக்கொருவர் எதிரிகளாகவே செயற்பட்டனர். எகிலப்பொலமீது மன்னன் சிறிதளவும் நம்பிக்கை வைத்திருக்கவில்லை. இவன் 1811இல் பிலிமையுடன் சேர்ந்து சதிமுயற்சியில் ஈடுபட்டதை மன்னன் அறிந்தே வைத்திருந்தான். பிலிமை செய்ததுபோல எகிலப்பொலவும் ஆங்கிலேயருடன் இரகசியத் தொடர்பு வைத்திருந்தான்.

இக்காலகட்டத்தில் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் ஆள்பதியாக கடமையாற்றிய மெயிற்லின் சுகயீனம் காரணமாக இடம்மாறிப்போக புதிய ஆள்பதியாக 13/03-1812 முதல் சேர் றொபேர்ட் பிறவுண்றிக் நியமனம் பெற்றார். ஆள்பதி மாளிகையில் டொயிலி என்ற ஆங்கிலேயன் சிங்கள மொழியை நன்கு கற்று கதைக்கவும் அதை ஓலையில் எழுதவும் வாசிக்கவும் திறமை பெற்றிருந்தான். இவனுக்கு கண்டியில் சில்லறை வியாபாரிகள், புத்தபிக்குகள், பிச்சைக்காரர்கள் போன்ற வேடங்களில் பல உளவாளிகள் செயல்பட்டு கண்டிநிலைமையை ஆள்பதிக்குத் தெரிவித்தபடி இருந்தனர்.

எகிலப்பொல ஆங்கிலேயருடன் வைத்திருந்த இரகசியத் தொடர்பை அறிந்த மன்னன் 1814ஆம் ஆண்டு பங்குனி மாதமளவில் அரண்மனைக்கு வருமாறு எகிலப்பொலவுக்கு கட்டளையிட்டான். அரண்மனைக்கு சென்றால் தனக்கு மரணம் நிச்சயம் என உணர்ந்த எகிலப்பொல சப்பிரகமுவாப் பகுதியில் கலகத்தைத் தூண்டிவிட்டு ஆங்கிலேயரிடம் சரணடைந்தான். கலகம் எற்பட்ட உடனேயே அதனை அடக்க மன்னன் ஏற்பாடுகளை செய்தான். மூன்றுகோரளை, நாலுகோரளை சப்பிரகமுவா பகுதிகளை மொலிகொடைக்கு வழங்கி, நாட்டின் தென்மேற்கு பகுதி போக்குவரத்தை மூடிவிட்டு கரைநாட்டு வியாபாரிகளை வெளியேறுமாறு கட்டளையிட்டான். எகிலப்பொலவின் மனைவி, பிள்ளைகளைக் கைதுசெய்து பிணையாளராக வைத்திருந்தான். எனினும் எகிலப்பொல மன்னனின் கட்டளைக்கேற்ப அரண்மனைக்கு வராமையால் சிறிதளவும் இரக்கமின்றி எகிலப்பொலவின் மனைவி, பிள்ளைகளை வாளால் வெட்டிக் கொலைசெய்வித்தான் மன்னன். இதைப்போல நாட்டைவிட்டு வெளியேறாத கரையோர வியாபாரிகள் பத்துப்பேரின் மூக்கு, காதுகளை தண்டக்காரர்கள்மூலம் அறுத்து மாலையாகக் கோர்த்து அனுப்புமாறு கட்டளையிட்டான். இவர்களில் மூவர் மட்டுமே உயிர்பிழைத்து ஆள்பதிமாளிகை சென்று முறையிட்டனர்.

நெப்போலிய யுத்தம் முடிவடைந்து அமியன்ஸ் உடன்படிக்கையின் படியும், வியன்னா மாநாட்டு முடிவின்படியும் இலங்கையை ஆங்கிலேயரே ஆழ்வார் என்பதால் கண்டிமீது தமது படைபலத்தைப் பிரயோகிக்க ஆங்கிலேயர் தயாராகினர். 1739இல் இயென்கின் என்ற ஆங்கிலேயனின் காதை ஒரு ஸ்பானிய மாலுமி அறுத்தமையால் ஸ்பெயினோடு யுத்தப் பிரகடனம் செய்த ஆங்கிலேயருக்கு தற்போது பலரின் காது, மூக்கு அறுக்கப்பட்டு 7பேர் மரணமாகியமை

www.tamilarangam.net

# வரலாற்றில் ஒரு பக்கம்

வீதுரன்.



இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை முழுமையாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஆங்கிலேயர், சுதந்திரமாக இயங்கிவந்த கண்டி இராச்சியத்தின்மீது படையெடுக்க சரியான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தனர். 1803ஆம் ஆண்டு ஆங்கிலேயர் கண்டியப் படைகளிடம் கற்றுக்கொண்ட கசப்பான வரலாற்றில் மறக்கமுடியாத அனுபவம் கண்டிமீது மீண்டும் படையெடுக்கும் எண்ணத்தை ஆங்கிலேயருக்கு ஏற்படுத்தவில்லை. (இப் படையெடுப்பில் ஒரேயொரு ஆங்கில வீரனே உயிர்தப்பினான்)

கண்டியரசன் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனின் நிலையும் அமைதியாய் இருக்கவில்லை. சிங்கள அரசவம்சம் மறைந்து 1739இல் தோன்றிய நாயக்கவம்சம் கண்டியில் வேரூன்றியதை விரும்பாத அதிகாரிகள் நாயக்க மண்ணை நீக்கி மீண்டும் சிங்கள அரசவம்சத்தை தோற்றுவிக்க முயன்றனர். ஆனால் மன்னன் விக்கிரம இராஜசிங்கன் அதிகாரிகளின் போக்கிற்கு/ மிரட்டலுக்கு அஞ்சாது தனது சுயாதீனப் போக்கில் வல்லவனாகவே செயற்பட்டான். அரசனை எப்படியாவது துரத்திவிட்டு தானே அரசனாக வரவேண்டுமென்று பிலிமை செய்துவந்த சதிமுயற்சிகள் எதுவும் வெற்றிபெறாத சூழ்நிலையில் பிலிமை ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்டான். பிலிமையின் அவசரம் ஆங்கிலேயருக்கு இருக்கவில்லை. அதேசமயம் பிலிமையின் சூழ்ச்சிகள் அம்பலமானதையடுத்து மன்னன் 1812ஆம் ஆண்டு ஆவணிமாதம் பிலிமைக்கு மரணதண்டனை விதித்தான்.

www.tamilarangam.net

தேர்தல் உடன்பாடு மேற்கொள்ள திராவிட கட்சிகளும் துடியாய்த் துடிக்கின்றன.

இம்மூன்று கட்சிகளைத்தவிர ஜனதாதள், ஜனதாதள் (எஸ்), இடதுசாரி- வலதுசாரி மார்க்சிய கம்யூனிஸ்டுகள், முஸ்லீம்லிக் (லத்திப்பிரிவு), பாட்டாளிமக்கள் கட்சி, உழவர் உழைப்பாளர் கட்சி என்பன குறிப்பிடக்கூடிய கட்சிகளாகும்.

தற்போதைய நிலையில் தேர்தல் வரும்பட்சத்தில் அதிமுக- காங்கிரஸ் ஓரணியாகவும், திமுக- ஜனதாதள்- கம்யூனிஸ்கட்சி என்பன ஓரணியிலும் நின்று போட்டியிடவுள்ளன. இதைத்தவிர புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாட்டாளிமக்கள் கட்சியும் அதிமுக (திருநாவுக்கரசு அணி) என்பன மூன்றாவது அணியாக நின்று போட்டியிடவுள்ளன. டாக்ட் ராம்தாஸ் தலைமையிலான பாட்டாளிமக்கள் கட்சி மக்கள்மத்தியில் பிரபல்யமாகிவரும் கட்சிய,ாகும். இக்கட்சி ஆரம்பிக்கப்பட்டு 3மாதங்களுக்குள் நடைபெற்ற கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 18இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றமை குறிப்பிடத்தக்கது. இக்கட்சி நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில் பங்குகொள்ள உள்ளமையானது இக்கட்சி குறிப்பிடத்தக்க வெற்றியையோ அன்றேல் கட்சிகளின் வாக்கைப் பிரித்து திராவிட கட்சிகளின் வெற்றியைப் பாதிக்கும் வகையிலோ அமையலாம் எனக் கருதப்படுகிறது.

1989 தைமாதம் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் பெரும் வெற்றிபெற்ற திமுக, அதேயாண்டு கடைசிப்பகுதியில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத தோல்வியை தழுவியது. (போட்டியிட்ட சகல இடங்களிலும் தோல்வி) இதுமட்டுமன்றி நடைபெற்று முடிந்த சட்டசபை இடைக்காலத் தேர்தல்கள் பலவற்றிலும் தோல்வியைத் தழுவியது.

மாநில அரசுகளை கலைக்கும அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கும் அரசியல் யாப்பு அதிகாரம் மத்திய அரசாங்கத்தால் பெருமளவில் தவறான பிரயோகத்துக்கே பயன்படுத்தப்பட்டது. அதிலும் குறிப்பாக 1970களின் பின்பே இந்நடவடிக்கை அதிகரித்துள்ளது. இதிலும் குறிப்பாக மாநில அரசாங்கங்களை பயமுறுத்தும் இந்நடவடிக்கை தென்னிந்திய மாநிலங்களிலேயே அதிகளவில் பிரயோகிக்கப் படுகின்றது. இச்சட்டப் பிரயோகம் வெறும் மரபுக்காக இடம்பெறும் எனவும், நாட்டின் ஐக்கியத்தையும் (?) ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்தவே இச்சட்டப் பிரமாணம் ஏற்படுத்தப் பட்டுள்ளதாயும் எனினும் இச்சட்டம் அமுல்படுத்தப்பட மாட்டாது எனவும் இந்திய அரசியல்யாப்பை வகுத்தவர்களில் முக்கியமானவரான டாக்டர் அம்பேத்கர் கூறியிருந்தமை இச்சமயத்தில் குறிப்பிடத்தக்கது.

நடைபெறவுள்ள தேர்தலில் அதிமுக, இந்திராகாங்கிரஸ் கூட்டணிக்கு வெற்றிபெற அதிகளவு வாய்ப்பிருப்பதாக தொடர்பு சாதனங்கள்மூலம் அறியக்கூடியதாக உள்ளபோதும் தேர்தலின் முடிவுகள் எதிர்பாராத முடிவுகளஊகவும் அமையலாம். இருவருடங்களில் ஆட்சி கலைக்கப்பட்டமை தவறுஎன்றும் 5வருடங்களுக்கு ஒருதடவை பிழையான ஆட்சியாளர்களைத் தூக்கியெறியும் உரிமை மக்களுக்குண்டு எனவும் (?) இவ்விடயத்தில் மத்திய அரசு தலையிட்டது தவறு என்றும் அபிப்பிராயம் தமிழக மக்களிடையேயுண்டு. எனினும் இதுபற்றி பெரியளவில் கூக்குரலிட கலைஞரால் முடியாது. ஏனெனில் 1980இல் இதேதவறுக்கு அவர் உறுதுணையாக இருந்தவர். மொத்தத்தில் திராவிடக் கட்சிகளால் 'திராவிடர்களுக்கு' எதுவும் பயனில்லை.

www.tamilarangam.net



"தலைவரே! முதலுக்கு மோசம் வந்திட்டுது!"

"ஏன், என்ன? பதறாமல் சொல்லு..."

"உங்கடை சொல்லைக் கேட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தரை துரோகியாகத் தெரிவு செய்து மரண தண்டனை கொடுத்தோம். இண்டைக்கு என்னெண்டா..."

"என்னெண்டா... கொம்பியூட்டர் பழுதாப் போச்சா?"

"இல்லை தலைவா! இண்டைக்கு கொம்பியூட்டர் எங்கடை சொல்லுக் கேக்காமல் சுயமாக மரண தண்டனைக்கு உங்கடை பெயரை தெரிவுசெய்துட்டுது..."

- ஈழத்தோன் -

செயற்படுத்தப்படவில்லை. அசுரவேகத்தில் பெருகிவந்த வேலையின்மையைக் குறைக்கும் நோக்குடன் எதுவித செயற்றிட்டங்களும் அமுல்படுத்தப்படவில்லை. தொடங்கிய ஒருசில திட்டங்களும் இடைநடுவில் நிறுத்தப்பட்டன. தனிப்பட்ட முதலீடுகளும் மத்திய அரசதொழிற் திட்டங்களும்கூடப் பரவலாக நடைபெறவில்லை. மாறாக இலவச சத்துணவு(?), இலவச பல்பொடி, இலவசவேட்டி சேலை, இலகுச ரவிக்கை இப்படிப் பல இலவச சாம்ராஜ்ஜியங்களை ஏற்படுத்தி தமிழக மக்களைத் தொடர்ந்தும் பிச்சைக்காரர்களாக வைத்திருப்பதில் அ.தி.மு.க. வெற்றி பெற்றதுடன் அரசின் கஜானாவையும் முன்னின்று காலியாக்கியது. அ.தி.மு.கவின் இன்றைய தலைமையை ஏற்றுள்ள (அதிமுகவின் இன்னுமோர் பிரிவினர் முன்னாள் மாநில அமைச்சர்களான பண்ருட்டி ராமச்சந்திரன், திருநாவுக்கரசு தலைமையில் இயங்கி வருகின்றனர்) முன்னாள் நடிகையும், கட்சியின் கொள்கைபரப்பு செயலாளராகக் கடமை புரிந்தவருமாகிய செல்வி ஜெயலலிதாவிடம் ஒரு கட்சித் தலைவருக்குரிய சிறப்புகள் சிறிதளவும் கிடையாது. கட்சியின் மூத்த உறுப்பினர்களை எல்லாம் வாய்மூடி மௌனிகளாக்கிவிட்டு, அடிக்கடி கொள்கைகளை மாற்றி கொள்கைப் பிரகடனம் வெளியிடும் 'செல்வி' கடந்த இருவருடங்களில் மூன்றுமுறை தனது பதவியை இராஜினாமாச் செய்யமுயன்று பின் மனமாற்றம் பெற்றவர். பலவருடங்களுக்குமுன் அதிமுகவில் ஜெயலலிதா செயற்பட்டதை எதிர்த்து வெளியேறிய எஸ்.டி.சோமசுந்தரமே இன்று ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரியவராக இருந்து வருகிறார். கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் செல்வி அவர்கள் தகுதியற்றவராகவும் மிகுந்த பலவீனமுள்ளவராகவும் இருக்கின்ற போதும் எம்.ஜி.ஆர்ஐ மையப்படுத்தி இயங்கிவருவதால் தமிழக மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ளதாகவே இயங்கிவருகிறது.

இவ்விரு திராவிட கட்சிகளுக்கும் அடுத்ததாக மக்கள் மத்தியில் பிரபல்யமான கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சியாகும். ராஜாஜி, காமராஜர் போன்ற மாநில முதல்வர்கள் காங்கிரஸ் கட்சி சார்பாக தமிழகத்தில் ஆட்சி நடாத்திய போதும், திராவிட கட்சிகளின் வருகையையடுத்து தமிழகத்தில் தொய்வு நிலையை அடைந்துள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை இந்திரா காங்கிரஸ் திராவிட கட்சிகளிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது. மத்தியில் இக்கட்சி உறுதியாக இருப்பதால் இக்கட்சியுடன்

www.tamilarangam.net

போட்டியிட்டதன்மூலம் இந்திரா அம்மையாரின் கடந்தகால அரசியல் பழிவாங்கல்களுக்கு நற்சான்றிதழ் வழங்கினார். இதுமட்டுமன்றி தனது அப்பட்டமான சுயநல அரசியலை நியாயப்படுத்தும் நோக்குடன் அரசியலில் நீண்டநாள் நண்பனுமில்லை நீண்டகால பகைவனுமில்லை என்ற புதிய அரசியல் தத்துவங்களையும் முழங்கினார்.

1989இல் பதவியேற்ற கலைஞர் மிகவும் கீழ்நிலையிலிருந்த நாட்டின் பொருளாதாரத்தையும் தொழிற்றுறையையும் கட்டியெழுப்பும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார் எனினும் அவரின் முயற்சி எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை. இதற்கு இரு முக்கிய காரணங்கள் உண்டு.

1. மேற்கூறிய துறைகள் மட்டுமன்றி மாநிலத்தின் பல்வேறுபட்ட நிர்வாகத் துறைகளிலும் கட்சியின் அரசியல் தலையீடு கலைஞரின் ஆசீர்வாதத்தோடு இடம்பெற்றது.

2. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தியிருந்த "இலவச சாம்ராஜ்ஜிய"ங்களை கலைஞரால் உடைத்தெறிய முடியவில்லை.

1980ஆம் ஆண்டுத் தேர்தலைத் தொடர்ந்து ஆரசியலில் வங்குரோத்து நிலையையடைந்த கலைஞருக்கு இக்காலத்தில் துளிர்விட்ட இலங்கைத் தமிழர்களது பிரச்சனை பெரும் வாய்ப்பாக அமைந்து, உலக தமிழினத் தலைவர் என்ற பதவியை தக்கவைத்து தனது பம்மாத்து அரசியலைத் தொடர வாய்ப்பாக அமைந்தது. எனினும் இலங்கைத் தமிழர் பிரச்சனையின் உண்மையான தாற்பரியத்தை கலைஞர் விளங்கிக் கொள்ளவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு சரியான தீர்வினை முன்வைப்பதற்குப் பதிலாக தனது சுயநல அரசியலுக்காக பிரச்சனை சிக்கலாவதையே கலைஞர் விரும்பினார். இலங்கைத் தமிழர் பிரச்சனையில் கலைஞர் காலத்துக்குக் காலம் அடித்த பெல்டி பிரபல்யமானது. 1987ஐத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்ட கலைஞர் இவ்வருட ஆரம்பத்தில் தனது பதவிக்கு ஆபத்து என்றவுடன் விடுதலைப் புலிகளில் பலரையும் (இவர்களில் பலர் உடல் ஊனமுற்று சிகிச்சை பெற்றுவந்தவர்கள்), புலிகள் என்ற பெயரில் இலங்கைத் தமிழ்ப் பிரஜைகள் பலரையும் கைதுசெய்து தனது பதவி ஆசையையும் எஜமான விசுவாசத்தையும் நிரூபித்தவர்.

ஈழவிடுதலை இயக்கங்களின் தொடர்ச்சியான பழிவாங்கல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதைத் தொடர்ந்து ஈழத்தமிழர் பிரச்சனை தமிழ்நாட்டில் முக்கியத்துவம் குன்றியதையடுத்து கலைஞரால் குப்பையில் போடப்பட்டு உயிரற்ற நிலையிலிருக்கும் திராவிடப் பாரம்பரியம், சுதந்திர சுயவாட்சி, ஹிந்தி எதிர்ப்பு, பிராமண எதிர்ப்பு போன்ற போராட்டங்களை முன்னெடுக்கும் முயற்சியில் தற்போது இறங்கியுள்ளார்.

## அ.தி.மு.க

தனிமனித சினிமா கவர்ச்சியில் இயங்கிவரும் அ.தி.மு.க. எதுவித கொள்கைத் திட்டங்களோ செயல்திட்டங்களோ இன்றி எம்.ஜி.ஆர். என்ற தனிமனித செல்வாக்கின் ஆதரவில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. 1977இல் முதன்முதலாக ஆட்சியைக் கைப்பற்றி தொடர்ந்து 11வருடங்களாக ஆட்சி நடாத்திய அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் தமிழகம் தொழிற்றுறையிலும் பொருளாதாரத் துறையிலும் மிகவும் கீழ்நிலையை அடைந்தது. இக்குறிப்பிட்ட காலத்தில் மாநிலத்தின் எதிர்காலம் குறித்து எதுவித பொருளாதார திட்டங்களும்

www.tamilarangam.net

பெருமளவில் பாதிக்கப்பட்டு இருப்பதுமாகும். தமிழக அரசு கலைக்கப்பட்டது தொடர்பாக அதிருப்தி கொண்டுள்ள கவர்ணர் பர்ணாலா (முன்னாள் பஞ்சாப் மாநில அகாலிதாள் கட்சித்தலைவர்) தனது பதவியை இராஜினாமா செய்ய முன்வந்தாராயினும் தற்போது பதவிமாற்றம் செய்யப்பட்டு இடம்மாறிச் சென்றுள்ளார்.

ஒப்பீட்டுரீதியில் இந்தியாவின் ஏனைய மாநிலங்களைவிட தமிழகத்தில் சட்டமும் ஒழுங்கும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. (சட்டசபைக் கலாட்டா, ஈபிஆர்எல்எஃவ் தலைவர்கள் படுகொலைகளைத் தவிர்த்துப் பார்த்தால்) காங்கிரஸ் ஆட்சியிலிருக்கும் அயல்மாநிலமான ஆந்திரப் பிரதேசத்திலே வெகு அண்மையில் ஏற்பட்ட மதக் கலவரங்கள்களில் பலநூறு பொதுமக்கள் வெட்டியும் தீமூட்டியும் கொல்லப்பட்டு, பல்லாயிரக் கணக்கானோர் வீடுவாசல்களை இழந்து அகதிகளாகியமையும், 90களின் ராஜ்நாராயணன் எனப் பத்திரிகைகளால் கேலிசெய்யப்படும் உதவிப் பிரதமர் தேவிலாலின் ஹரியானாவில் இடம்பெற்றுவரும் வன்முறைகளுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் ஆட்சி கலைக்கப்படும் அளவுக்கு சட்டமும் ஒழுங்கும் பெரிதளவில் பாதிப்புறவில்லை என்பது பெரும்பாலான தமிழகப் பத்திரிகைகளின் கருத்தாகும்.

## தி.மு.க.நிலை

திராவிடம் திராவிடர்க்கே என்று கூறிக்கொண்டு அரசியலில் இறங்கி, அரசியலில் பல குத்துக்கரணங்களை அடித்து வெறும் சந்தர்ப்பவாத அரசியலை நடாத்திவரும் தி.மு.கவின் இன்றையநிலை மிகவும் கவலைக்குரியதாகவே உள்ளது. "நீதிக்கட்சி"யில் இருந்து பிரிந்து (இக்கட்சி ஏகாதிபத்திய ஆட்சியை ஆதரித்தமை குறிப்பிடத்தக்கது) அக்காலத்தில் புரட்சிகரமான(?) கருத்துகளை மக்களுக்கு பிரச்சாரம் செய்துவந்த ஈ.வே.ரா. பெரியாருடன் இணைந்து திராவிடகழகத்தில் செயற்பட்ட அறிஞர் அண்ணா, பின் பெரியாருடன் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்து திராவிடம் (தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய பிரதேசம்) திராவிடர்க்கே என்ற கோரிக்கையை முன்வைத்து அரசியல் போராட்டங்களை நடாத்தினார். எனினும் 1960களின் ஆரம்பத்தில் பிரதமர் நேருவால் கொண்டுவரப்பட்ட பிரிவினைத் தடைச்சட்டத்துக்கு தலைவணங்கி அரசியலில் திடீர் பல்டியடித்தார். அண்ணாவின் மறைவையடுத்து தலைமைப் பதவியைக் கைப்பற்றிய கலைஞர் கருணாநிதி திராவிட தனிநாட்டுக் கோரிக்கைக்கு பதிலாக "சுதந்திர சுயவாட்சி", "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" தமிழ்நாடு தமிழருக்கே" போன்ற கோஷங்களை முன்வைத்து தனது சுயநல அரசியற் பிழைப்பைத் தொடர்ந்தார். எனினும் 1976இல் அப்போதைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியால் ஊழல்சாட்டின் பேரில் இவாது ஆட்சி பறிக்கப்பட்டது.

பதவிக்காக எதையும் செய்யத் தயாராயிருக்கும் கலைஞர் தி.மு.கவினால் பிரச்சாரம் செய்யப்பட்டுவந்த திராவிட பாரம்பரியங்களை(?) எல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு "நேருவின் மகளே வருக நிலையான ஆட்சி தருக!", "உறவுக்குக் கைகொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்" போன்ற அரசியல் டயலாக்குகளை பேசி இந்திரா காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில்

www.tamilarangam.net




கடந்த இருவருடங்களாக தமிழக சட்டசபையில் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி நடாத்திவந்த கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசாங்கம் மத்திய அரசின் சிபாரிசுக்கமைய இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமனால் கலைக்கப்பட்டு தற்போது கவர்ணர் ஆட்சி அமுல்படுத்தப் பட்டுள்ளது.

ஏறத்தாழ 13வருடகால அரசியல் வனவாசத்துக்குப் பிறகு 1989இல் ஆட்சியைக் கைப்பற்றிய கலைஞரின் அரசாங்கம் மிகக் குறுகிய காலத்துக்குள் கவிழ்க்கப்பட்டமை கலைஞரைப் பொறுத்தவரை பெரும் அதிர்ச்சி வைத்தியமே. இவ் அதிர்ச்சியில் இருந்து கலைஞர் இன்னும் விடுபடவில்லை என தமிழகப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. தனது ஆட்சிக் கலைப்பையிட்டு மத்திய அரசையும் பிரதமர் சந்திரசேகரையும் கடுமையாகச் சாடியிருக்கும் கலைஞர், மத்திய அரசின் இவ்வடாவடித்தனத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாய்க் கூறியுள்ளார். பின்கதவு வழியாகப் பதவியைக் கைப்பற்றிய சந்திரசேகர் தலைமையிலான (ஜனதா தள்- எஸ்) மத்திய அரசாங்கம் மக்கள் ஆதரவற்ற தனது சிறுபான்மை அரசாங்கத்தின் ஆயுளை நீடிக்கவே சட்டசபையில் பெரும்பான்மை ஆதரவுள்ள தனது அரசாங்கத்தை கலைத்துள்ளதாக, கடுமையான தொனியில் சாடியிருக்கும் கலைஞர், தேர்தலைச் சந்திக்க தான் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

கலைஞரின் ஆட்சி கலைக்கப் பட்டமைக்கு மத்திய அரசால் தெரிவிக்கப்பட்ட காரணம், தமிழகத்தில் விடுதலைப் புலிகள் பெருமளவில் ஊடுருவி இருப்பதாகவும் இதன் காரணமாக மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு என்பன

www.tamilarangam.net

பேணுவதில் மிகுந்த கவனமுடையவர்களாதல் வேண்டும். இச்சுதந்திரம் நமது கருத்துக்கு ஒவ்வஏததை மறைப்பதை விட முரண்பட்ட கருத்துகளை வெளியிடுவதன் மூலமே எய்தப்பெறலாம்"

அவர் கடத்தப்படுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர், ஏலவே உயிர்க்கு அச்சுறுத்தல்கள் விடப்பட்டிருந்த வேளையிலும் த.அ.பு. பற்றிப் பின்வருமாறு எழுதியிருந்தார்.

"சுதந்திரமான அமைப்பாக நம்மால் இயங்க முடியாது விட்டால், அதனை மூடிவிடுவதே உகந்தது"

இத்தகைய ஒரு மனிதன் வாழ்ந்து கொண்டிருப்பது பலவந்தமான அபிப்பிராய ஒருமைப்பாட்டை செயலுறுத்த முனையும் எக்குழுவின் இயக்கத்திற்கும் ஒரு சவாலாக அமையும் என்பதை உணர்ந்து கொள்வது சிரமமன்று. கந்தசாமி அவர்கள், இன்று இந்நாட்டில் சிலரினுஞ் சிலரே பாதுகாக்க முனையும் ஒரு இலட்சியத்துக்காக தம் வாழ்வை அர்ப்பணித்த ஒரு தியாகி என்று துணிந்து கூறலாம்.

நன்றி: கந்தசாமி நினைவு மலர்

# இஸ்ரேலிய ஜனநாயகம்



இரசாயன ஏவுகணை மிரட்டலை ஈராக் குவைத் பிரச்சனை தொடங்கிய நாளிலிருந்து செய்து வந்தது. அதுவும் குறிப்பாக இஸ்ரேலுக்கே இம்மிரட்டலை விடுத்தது. உடனடியாக இஸ்ரேலும் காரியத்தில் இறங்கியது. அது தன் யூதமக்களுக்கு நச்சு தற்காப்பு முகமூடிகளை வழங்கியது. ஆனால் இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட பகுதியில் தினமும் மோசமாக ஒடுக்கப்பட்டுவரும் பாலஸ்தீன மக்களுக்கு இந்த நச்சு தற்காப்பு முகமூடிகள் வழங்கப்படவில்லை. (கடைசி நேரத்தில் ஒருசிலருக்கு மட்டும் வழங்கி விளம்பரப்படுத்தியதும் உண்மை) இதுபற்றி ஜனநாயகம்பற்றி பெரிதாக அலட்டும் அமெரிக்காவும் அதன் வால்பிடிகளும் பெரிதாக அக்கறையேதும் கொள்ளவில்லை. இதிலிருந்து என்ன புரிகிறது?

– விதுரன் –

www.tamilarangam.net

தொடங்கி விட்டால் அது நிறுத்த முடியாத தொடர்கதை நிகழ்வாகவே அமையும். பொலிசுக்குத் தகவல் கொடுப்பவரை ஒழிக்க முற்படுவீர்கள். அது தக்கசெயலே என்று நியாயப்படுத்துவீர்கள். ஆனால் அவ்வளவோடு நிறுத்திக்கொள்ள மாட்டீர்கள். ஏனென்றால் விடுதலை என்ற புனிதக் குறிக்கோளை எய்த நின்ற மார்க்கத்தில் குந்தகமாக இருப்பவர்களை கொலை செய்வது நியாயமே என ஏலவே நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள். அத்தோடு விடுதலை அடையப் பெறுவதற்கான சரியான உபாயம் உங்களிடத்தும் உங்கள் குழுவிடத்தும் மட்டுமே உண்டென்பது பற்றியும் உறுதியாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒருபோதும் தவறிழைக்க மாட்டீர்கள் என்ற உமது பூரணமான உறுதிபடைத்த நம்பிக்கையும் நீங்கள் பின்பற்றும் மார்க்கத்தின் இரக்க உணர்வற்ற பாங்கும் வெகுபயங்கரமானது. இத்தகைய தார்க்கீக நியாயத்தை அரணாகக் கொண்டு உங்களைப் போன்று தாமும் அதே இலட்சியத்துக்காக பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் (ஆனால் உங்கள் கருத்துப்படி) தவறான மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற கட்சியினரை அல்லது குழுவினரையும் கொலைசெய்யப் புகுவீர்கள். ஆனால் அவ்வளவோடு அமையமாட்டீர்கள். உங்கள் தர்க்க நியாயப்படி உங்கள் குழுவினர்க்குள்ளேயே உங்களோடு மாறுபடுவோரை துரோகிகளாகக் கருதி அவர்களையும் ஒழிக்க முனைவீர்கள். இன்னும் இந்நடைமுறைப் பாங்கானது விரும்பிய அதிகாரம் கைப்பற்றப் பட்டவுடன் ஓய்ந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. அது வகுத்துச் செல்லும் பாதையானது சித்திரவதைக் கூடங்கள், ஓயாத ஒழித்துக் கட்டல்கள், கொலை முகாங்கள் மலிந்த சமுதாயத்துக்கே இட்டுச் செல்வதாகும். இந்த ஒளிவெளிச்சத்தில் கந்தசாமி அவர்கழ் ஏன் இறக்க நேர்ந்தது எற்பதைப் புரிந்துகொள்ள இயலும். அவர் தனிமனித மனச்சாட்சிச் சுதந்திரத்திலும் நீதியிலும் நம்பிக்கை கொண்டவர்; அவர் அதனை எந்தவொரு அரசியற் குழுவுக்கோ தலைவர்க்கோ தாரை வார்த்துக் கொடுக்க விரும்பவில்லை. அவருடைய நினைவு மலரைப் படிக்க நேர்ந்த போது அவர் கைப்பட எழுதிய சில பகுதிகளை வாசித்து, வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தேன். சுதந்திரமான தடையற்ற சிந்தனை, செயற்பாடு பற்றிய அவரது கருத்துகளை ஒளிவுமறைவின்றி நேரிதாகவும் புலப்படுத்துவன. ஒரு குறிப்பு சற்றடே றிவியூ (Saturday Review) பத்திரிகை தொடங்குவது பற்றிய திட்ட ஆலோசனை விஞ்ஞாபனத்தின் ஓர் பகுதியாகும். அக் குறிப்பில் வருவன இவை. "இது அரசியல் பத்திரிகையாகவோ அல்லது ஒருபுடைச் சார்புடையதாகவோ அமையும் நோக்கமுடையதன்று. தமிழர்கள் உரிமைகள், இந்நாட்டில் இன உறவுகள் என்பன பற்றிய சகல கருத்துகளும் வெளிப்படுத்தற்குரிய அரங்காகவே அது அமையும். இருப்பினும் குறுகிய நோக்கமுடையதாகாது. பத்திரிகைப் படைப்பின் எழுத்துநடை தனித் தன்மை வாய்ந்ததாயினும் அணுகுமுறை தாராண்மையும் தூய்மையுமின்றதாகவே விளங்கும்." பின்னர் ஒரு கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "நாம் பத்திரிகையின் சுதந்திரத்தைப்

www.tamilarangam.net

இதுவே. அதாவது மக்கள் தங்கள் செயற்பாங்குமூலம், தமக்கு விமோசனத்துக்கு வேறுவழியில்லை என்பதைப் புலப்படுத்தலேயாம். ஆனால் ஒருசிலரைக் கொண்ட குழுவானது, மக்கள் வெறும் பார்வையாளர்களாய் விளங்க, பயங்கரத்தையும் வன்முறையையும் கையாண்டு தாமே சமூகத்தை மாற்ற முனையும்போது, "விரும்பிய குறிக்கோளை எய்துதற்கு எத்தகைய வழிமுறையையும் கையாளலாமா?" என்ற வினாவை நாம் எழுப்புவது மாத்திரமன்றி லசோல் வினாவிய பாணியில் "கடைப்பிடிக்கும் மார்க்கம் கருதிய குறிக்கோளை அடைய வழிவகுக்குமா?" என்ற வினாவையும் எழுப்ப வேண்டும். விடுதலையே குறிக்கோள் எனில்- அத்தகைய விடுதலையானது உள்ள நிலையிலும் கூடிய சுதந்திரமும், நீதியும், பரிவுணர்வும், நாகரீகப்பண்பும் கொண்ட சமுதாயத்துக்கு வழிவகுப்பதாதல் வேண்டும்- யாரைக் கொன்றொழிக்கும் என்ற உணர்வின்றிக் குண்டுவைத்தலும், அப்பாவிப் பொதுமக்களைப் படுகொலை செய்தல், தமக்கு மாறுபட்ட அரசியல் முகாமைச் சேர்ந்தவர்களை ஒழித்துக் கட்டுதல் என்றின்ன செயற்பாடுகளால், இவ் விடுதலைக் குறிக்கோள் எய்தப் பெறலாமா? இத்தகைய கட்டற்ற கண்மூடித்தனமான வன்முறைச் செயற்பாட்டு நடைமுறை அதில் பங்குகொள்வோரையும் செய்யக் கட்டளை இடுவோரையும் கட்டளைகளை நிறைவேற்றுவோரையும் முரட்டுத்தனமும் மிருகவெறியும் உடையோராக்கி விடுகிறது. இவர்கள் அதிகாரத்துக்குவரும் பட்சத்தில் அவர்கள் உருவாக்கும் சமூகத்திலும் இவ்வன்முறைச் சுவடு பதிக்கப்படவே செய்யும். அத்தகைய சமுதாயம் பொதுமக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளியாது அரசியல் தலைவர்களால் நடாத்தப்படும் இறுக்கமான, விறைப்பான, கட்டுப்படுத்தப்பட்ட சமுதாயமாகவே விளங்கும். இங்கு அரசுக்கு மாறுபட்ட அபிப்பிராயம் நிலவுவதற்கே இடமிருக்காது. அத்தகைய போக்கும் நோக்கும் தீவிரமாகக் களையப்படும். இத்தகைய நிலையை விடுதலை எனக் கூறுவது இரணியன் தனது ஆட்சியில் 'இரணியாய நம' என்ற பாங்கில் சொற்களுக்கு அவன் கற்பித்த பொருளே பொருளாக மக்கள் கையாண்ட மொழி நடைமுறைக்கே அமைவுடையதாகும்.

இனி தனிப்பட்டவர் கொலைசெய்யப்படுவது பற்றி இங்கு சிறிது குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில் அது நாம் இன்று நினைவுகூரும் நடுநாயகமான சான்றோனின் விதியோடு சம்பந்தப்பட்ட விடயமாக உள்ளது. கடந்த சகாப்தத்தில் நிகழ்ந்த சம்பவங்களை அவதானிக்கும் இடத்து எத்தகைய விடுதலை எய்தல் நோக்கிலும் கொலை செய்தல் ஆகிய வழிமுறை ஒவ்வாதது என ஒதுக்கப்பட்டமையின் அறிவுடைமை உணர்தற்பாலது. ஜனரஞ்சக அபிமானமற்ற அல்லது அடக்குமுறையில் அரசின் முகவர்களாக விளங்கியவர்களைக் கொலைசெய்துவிட்டு அவர்களுக்கு விதித்த கொலைத் தண்டனை அவர்கள் கடந்த காலத்தில் இழைத்த கொடுஞ் செயல்களுக்கு பரிகாரமாய் அமைந்தவை என்று கூறலாம். அதனால் அவர்களுக்காக எவரும் கண்ணீர் வடியாமலும் இருக்கலாம். ஆனால் இத்தகைய தூய்மையிழந்த பாசிபடர்ந்த மார்க்கத்தில் பயிலத்

www.tamilarangam.net

புகலும் போராளிகள் கூற்றை நாம் ஏற்றுக் கொண்டு அனுசரிப்பதா?

மாக்சிய வேதாந்தம் ஆசங்கைக்கிடமற்ற புனிதக் கோட்பாட்டு அதிகாரமுடையதெனக் கருதுபவருள் யான் ஒருவன் அல்லன். உண்மையில் இன்றைய காலகட்டத்தில் மாக்ஸியவாதி என்ற நாமப்பட்டி புனைவதையும் விரும்பவில்லை. ஆனால் இந்த வன்முறை என்ற குறிப்பிட்ட விடயத்தைப் பொறுத்தவரை உயர்தனிச் செம்மை சான்ற மாக்ஸியவாதிகளின் சிந்தனை பயன்தரும் தாற்பரியம் உடையதென்றே கருதுகின்றேன். அத்துடன் இன்றைய போராளிக் குழுக்களின் வன்முறை பற்றிய நிலைப் பாட்டைக் கணிப்பதில் இச்சிந்தனை துணை நிற்க வல்லது என்றெண்ணுகிறேன். செம்மை மாக்ஸியவாதிகள் நடப்பிலுள்ள அரசினைக் கவிழ்ப்பதற்கு பெருந்தொகை மக்களும் ஈடுபாடு கொண்டு போராடும் புரட்சிகளுக்கும், ஒரு சிறுபான்மைக் கூட்டம் அரச அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் மேற்கொள்ளும் சடுதிச்சதி, கலகம் போன்ற தீவிர செயல்களுக்குமிடையே தெளிவான வேறுபாடு உண்டென்பதைக் கண்டனர்.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு, இவ்விரு சார்பினரும் கையாண்ட வழிமுறைகளிடையே உள்ள பேதங்களையும் வேறுபடுத்திக் கண்டனர். மக்கள் கலந்துகொள்ளும் மாசனக் கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு போன்ற செயற்பாடுகள் புரட்சியின் வடிவங்கள். பகிரங்க இடங்களில் குண்டுகள் வெடித்தல், நாசகார நடவடிக்கை, தனிநபர்களைக் கொலைசெய்தல் போன்ற செயற்பாடுகள் மாற்றத்தின் முகவர்களாக மக்கள்பேரில் தம்மைப் பதிலீடு செய்யமுனையும் குழுக்கள் மேற்கொள்ளும் செயல்களாகும். இப்படிச் சொல்வதால் புரட்சி விடயத்தில் தாமே சுயமாகத் தொழிற்பட்டார்கள் என்று பொருளாகாது. புரட்சியிலும், மக்கள் அணிகளாகத் திரட்டப்பட்டு வழிநடத்தப்பட்டார்கள். ஆனால், பொதுமக்கள் கூட்டம் தங்கள் நிலையை மாற்றிக்கொள்ள வேறு வழியில்லை என்று உணர்ந்தாலன்றி கிளர்ந்தெழ மாட்டார்கள். மாசனப் நரட்சியின்போது வன்முறை இடம்பெறுங் கட்டத்தில் கூறத்தகு தார்மீக நியாயவாதம்

---

### 17ம் பக் தொடர்ச்சி.......

வெளியில் வசித்தகாலமாகக் கருதப்படும்.

முதற்பந்தியில் குறிப்பிட்டபடி நோர்வேக்கு வெளியில் வசித்தகாலம் கணிப்பிடுதல் புதிதாக கணிப்பிடத் தொடங்குவதற்கு குறைந்தது முன்பு நோர்வேக்கு வெளியேயிருந்த அளவு காலமாவது காலமாவது நோர்வேயில் இருந்திருக்க வேண்டும். நாட்டைவிட்டு வெளியேற்றப்படும் பட்சத்தில் நிரந்தர வதிவிட அனுமதியை இழப்பார்.

தொழில், படிப்பு அல்லது குழந்தை வளர்ப்பு சம்பந்தமாக வெளிநாட்டில் வசித்தபின் நோர்வே வந்து மீண்டும் நிரந்தரமாக வசிக்க விரும்புபவர்கட்கு அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் நிரந்தர வதிவிட அனுமதியை இழக்காமலேயே தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்குமேல் நோர்வேக்கு வெளியே வசிக்க அனுமதி கொடுக்கலாம்.

இச்சந்தர்ப்பத்தில் நோர்வேக்கு வெளியே வசிப்பதற்கு அனுமதிக்கும் காலஎல்லை அளவைப் பொறுத்தமட்டில் முன்பு நோர்வேயில் வசித்த காலமும் நோர்வேக்கு வெளியே வசிப்பதன் நோக்கமும் கருத்திற் கொள்ளப்பட்டு நிர்ணயிக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போது போராளிக் குழுக்களின் தருக்க நிலைப்பாட்டினை நோக்கலாம். இவர்கள் தமது அரசியற் போராட்டத்துக்கு வன்முறையைத் தேர்ந்த நெற்யாகக் கொண்டுள்ளனர். இங்கு தோன்றும் பிரச்சினைகள், சில முக்கிய அம்சங்கள் நோக்கில் அரச வன்முறைப் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டவையாகும். பாராளுமன்ற சனநாயக சட்டத்துக்கு அமையத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் நெறிமுறையற்ற வன்முறைக்கு இடமளிக்காத அரசியற் கோட்பாடுகளைப் பின்பற்றுவதாகக் கூறுவன. ஓரொருகால் சட்ட முரணான வன்முறைகளை அரசாங்கம் கைக்கொள்ளுமிடத்து, அவை பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் சட்டநெறிக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசாங்க நடவடிக்கைகளை ஆட்சேபிக்கலாம். ஆனால் போராளிக் குழுக்கள் வன்முறையே தமது மார்க்கம் என்பதனை ஒளிவு மறைவேதுமின்றித் தெட்டத் தெளிவாக ஒத்துக் கொள்ளுகின்றன. அத்துடன் வற்முறை நெறியாலேதான் சமூகத்தை மாற்றியமைத்தலும் சாலும் என்பதும் அவர்களது நம்பிக்கை.

போராளிக் குழுக்கள் தமது செயற்பாடு விடுதலை நோக்குடையதெனக் கூறி வரலாற்று புரட்சிப் பாரம்பரியத்தோடு தம்மையும் சார்த்தித் தம் உன்னத நிலையை உணர்த்த முற்படுவர். அடுத்த மாதம் பிரான்சும் உலகமும் மாபெரும் புரட்சியொன்றின் இருநூறாண்டு நிறைவை நினைவுகூர உள்ளன. இதனையடுத்து ருஷ்ய, சீனப் புரட்சிகளும் இன்னும் அவற்றையடுத்த புரட்சிகளும் கொடுங்கோன்மையும்

—ooo தமிழரங்கம்

ஒஸ்லோவில் வெளிநாட்டவர்க்கான வானொலி ஒலிபரப்பான Radio Immigranten வழங்கும் தமிழ் ஒலிபரப்பு ஞாயிறு மாலை ஆறு மணிக்கு பண்பலை வரிசை (Fm) 101,1 மீற்றரில் ஒலிபரப்பாகிறது. தற்போது புதிய நிகழ்ச்சிகள் வாரந்தோறும் ஒலிபரப்பாகின்றன.

செய்தியாளன்

அநியாயமும் மலிந்த ஆட்சிகளை அகற்றுவதற்கு மக்களுக்கு உரிமையுண்டென்ற எமது நம்பிக்கைக்கு உரமூட்டுவதாயுள்ளன இப்புரட்சிகள் நடைபெற்றவையெல்லாம் நியாயத்தின்பாற் பட்டவையோ என்று கேட்க இடமுண்டு. ஆனால் என்னதான் குறைகள் கூறப்படினும் மாகபெரும் புரட்சிகளது விடுதலைப் பண்பு அங்கீகரிக்கப்பட வேண்டியதொன்றே அத்துடன் காலாந்தரங்களில் அவற்றுக்கெதிராகப் பூசல்கள் கிளப்பப்பட்ட போதும் அவை மீண்டும் புத்துயிர் பெற்றுத் தம் புரட்சித் தன்மையை செறியச் செய்து நின்றன என்பதை மறுப்பதற்கில்லை. ஆகவே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அனைத்துத் தோற்றங்களிலும் வன்முறைகள் கண்டிக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? அல்லது மாறாக, விடுதலையின் பெயரால் வன்முறை இழைக்கப்படும் போதெல்லாம், அது நியாயமானதென ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## வன்முறையும் மனித உரிமைகளும்

### கந்தசாமி நினைவுப் பேருரை

நியாயவாதியும், நிவாரண புனருத்தாரண தொண்டரும் மனித உரிமை ஆதரவாளருமான க.கந்தசாமி அவர்கள் 19யூன் 1988 அன்று யாழ்ப்பாணத்தில் கடத்திச் செல்லப்பட்டதையடுத்துக் கொல்லப்பட்டார் எனக் கருதப்படுகிறது.

'வன்முறையும் மனித உரிமைகளும்' என்ற தலைப்பிலான இந்தப் பேருரை ரெஜி சிறிவர்த்தனா அவர்களால் கடத்தலின் முதலாண்டு நிறைவையும், 'அகால மரணம் - கந்தசாமியின் நினைவு மலர்' என்ற நூல் வெளியீட்டையும் குறிக்குமுகமாக கொழும்பில் 1989 யூன்19ல் ஆற்றப்பட்டது.

*(முன் இதழ்த் தொடர்ச்சி)*

போராளிக் குழுக்களின் செயற்பாடுகள் பற்றிப் பின்னர் விளக்குவேன். முதலில் சனநாயக நெறியற்ற வழிமுறைகளால் சனநாயகத்தைப் பேணுதலும் சட்ட நெறியைக் கடந்து சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதுமாகிய அர்த்தமற்ற நிலைப்பாடு ஆராயப் படற்குரியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தினை, பலாத்காரமாக வீழ்த்த எவரேனும் முயலுமிடத்து, அம் முயற்சியை முறியடித்துத் தன்னைக் காத்துக் கொள்ளும் உரிமை அரசுக்கு நிட்சயமாக உண்டு. ஆனால் ஒரு சனநாயக நாடு பயங்கர வாதத்தையும் கிளர்ச்சிவாதத்தையும்கூட நெறிமுறையிலே வழிவகைகளைக் கையாண்டு போராடவியலாது. அவ்வாறு போராடுமிடத்தோ, போராட முற்படுமிடத்தோ எதிர்க்கும் அரசுக்கும் எதிர்க்கப்படும் சக்திக்குமிடையே, இரு சாராரும் நெறியல்லாத நெறியைக் கையாளும் தன்மையால் பேதம் காணவியலாது போய்விடுகிறது. இதன் விளைவாக அத்தகைய வழிமுறைகளைக் கையாளுவதால் எந்த மக்களைப் பாதுகாக்க முயல்வதாக அரசு சொல்லிக் கொள்கின்றதோ அம்மக்களின் அனுதாபமும் ஒத்துழைப்பும் கிட்டாமல் அந்நியமாகி விடுகின்றன. உள்நாட்டு யுத்தங்களில் துப்பாக்கியாலன்றி, மக்களின் ஆதரவு மூலமே வெற்றி காணப்படுகிறது. அவ்வரசியல் போரில், ஒவ்வொரு கிராமமும், காலாந்தரத்தில் மறுதரப்பின் வெற்றி நிலைக்கு அனுகூலமாகவே அமையும். இவ்வுண்மை வடக்கிலும் கிழக்கிலும் தெளிவாக நிரூபிக்கப்பட்டது. நாட்டின் ஏனைய பாகங்களிலும் இது உறுதியாக்கப்பட்டு வருகிறது.

ஜனவரி 19
* கொழும்பில் நிகழ்ந்த அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் பொலிசாரால் கலைக்கப்பட்டன.

ஜனவரி 20
* மகசீன் சிறையில் அதிகாரிகட்கும் கைதிகட்கும் இடையில் நிகழ்ந்த கைகலப்பில் ஒருவர் கொல்லப்பட்டார்.

ஜனவரி 21
* மீன்பிடி அமைச்சு திருமலைக்கு மாற்றப்பட்டது.
* சமசமாஜக் கட்சி யுத்தத்திற்கெதிராக, யாணந்துறையில் நடத்தத் திட்டமிட்டிருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

ஜனவரி 23
* கிழக்கில் மோதல்கள் தீவிரமடைந்தன.

ஜனவரி 24
* அம்பாறையில் 27 சிங்களப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.


ஜனவரி 26
* தாம் யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக புலிகள் அறிவித்தனர்.

ஜனவரி 27
* பாதுகாப்புக்காக ஆயுதங்களைப் பெற்று அவற்றை மீளளிக்காத 4,000 பேருக்கெதிராக வழக்குத் தொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

ஜனவரி 28
* முல்லைத்தீவில் குண்டுவீச்சால் பெருமளவு உயரத்துக்குத் தீப்பற்றி எரிந்தது.


ஜனவரி 29
* இந்திய வெளிவிவகார அமைச்சர் சுக்லா இலங்கை வந்தார்.

ஜனவரி 30
* இலங்கை வெளிநாட்டமைச்சரிடம் இந்தியா, இலங்கைக்குள் படைகளை அனுப்பாது என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுக்லா உறுதியளித்துள்ளார்.




புதுமை (காலாண்டிதழ்)
'Puthumai'
Mainzer Land str 147,
6000, Frankfurt 1,
WEST GERMANY

அஆஇ (காலாண்டிதழ்)
Aanaa Aavanna Ienaa
Post bus 8523,
8905, K.M. LEEUWARDEN,



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அமைப்புக்கு முரணானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஜனவரி 9

* காணாமற் போனோர், விசாரணையற்ற படுகொலைகள் பற்றி



A victim of the Liberation Tigers of Tamil Eelam left tied to a lamp-post as a warning to others in Batticaloa, 1988

ஆராய ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என ஐரோப்பியப் பாராளுமன்றம் கேட்டுள்ளது.

* இலங்கை விவகாரங்களில் தலையிடுவது பற்றி இந்திய அரசு கவனமாக நடந்து கொள்ளும் என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் கூறியுள்ளார். இலங்கை அரசின் நடத்தைகள் இந்திய அரசுக்கு மிக மோசமான அனுபவத்தைத் தந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

* புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 43 பொலிசாரை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

இலங்கைக்கு உதவியாக வழங்கும்.

ஜனவரி 10

* யுத்த நிறுத்தம், புலிகள் ஆயுதங்களைக் கீழே வைப்பது என்ற நிபந்தனையுடன் அமையவேண்டும் என எதிர்க் கட்சிகள் சில கருத்து வெளியிட்டுள்ளன.

* யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க செஞ்சிலுவைச் சங்கம் மறுத்துள்ளது.

* நான்கு படை முகாம்கள் புலிகளால் தாக்கப் பட்டுள்ளன.

ஜனவரி 11

* அரசியல்வாதிகட்கான பாதுகாப்பைக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. வருடாந்தம் 8 கோடி ரூபா அரசியல்வாதிகளின் பாதுகாப்பிற்காகச் செலவாகிறது.

* இஸ்ரேல் தொடர்பாக மொசாட் உளவாளி ஒருவர் எழுதிய நூலில் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்ட தகவல்கள் தொடர்பாக ஆணைக்குழு விசாரணை தொடங்கியது.

* யுத்த நிறுத்தத்தை நீடிக்க 11 அரசியல் கட்சிகள் கோரியுள்ளன.

ஜனவரி 12

* யுத்த நிறுத்தம் முடிவடைந்ததாக அரசு அறிவித்தது.

ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

ஜனவரி 13

* வருட முடிவில் படையினரின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டும் என அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார்.

ஜனவரி 14

* கிளிநொச்சியில் அதிகளவில் விமானத் தாக்குதல்கள் நிகழ்ந்தன.

* யாழ்ப்பாணத்தில் இருந்து பெருந்தொகை அகதிகள் வவுனியா வந்தனர்.

ஜனவரி 15

* புலிகளால் விடுவிக்கப்பட்ட பொலிசார் செஞ்சிலுவைச் சங்கத்தால் அரசிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஜனவரி 16

* தாம் யுத்த நிறுத்தத்தைத் தொடர்வதாக புலிகள் அறிவித்தனர்.

ஜனவரி 18

* கிழக்கில் காட்டில் படையினர் புலிகள் மோதல் நிகழ்ந்தது.

* பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவோர் தொகை 6,500இல் இருந்து 9,300 ஆக அதிகரிக்கிறது.

www.tamilarangam.net

www.tamilarangam.net

# செய்திகள்

ஜனவரி 1

* புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை நிபந்தனையின்றி அரசு ஏற்கவேண்டும் என கூட்டணி கேட்டுள்ளது.

* 4இலட்சம் அரச பெருந்தோட்ட ஊழியர்கள், தனியார் பெருந்தோட்டங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 300ரூபா

வழங்கப்படாவிடின் 21ஆந் திகதிமுதல் வேலைநிறுத்தத்தில் இறங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

* மோதல்கள் எதுவும் நிகழவில்லை.

ஜனவரி 2

* டிபிஎல்எ∴வ், ஈபிடிபி, ஈஎன்டிஎல்எ∴வ், டிடபிள்யூசி - சில நிபந்தனைகளுடன் யுத்தநிறுத்தத்தை வரவேற்றுள்ளன.

* புலிகள் ஒருமுறை எங்களை ஏமாற்றியதால் அரசு கவனமாக நடந்துகொள்ள வேண்டுமென ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனவரி 3

* யாழ் மாவட்ட ராணுவ அதிகாரியாக விஜய விமலரட்ண பொறுப்பேற்றுள்ளார்.

* ‘நாகரிகமற்ற’ முறையில் 1300 தமிழ்ப் போராளிகள் கைதானது குறித்து புலிகள் கண்டித்துள்ளனர்.

ஜனவரி 4

* ஏழு நாட்களுக்குத் தாக்குதல்களை நிறுத்த அரசு தீர்மானித்துள்ளது.

* வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த ஈபிஆர்எல்எ∴ப் கோரியுள்ளது.

ஜனவரி 5

* பொதுச் சேவைகளில் இருந்து தொடர்ந்து 28,604பேர் தமது பதவிகளில் இருந்து இளைப்பாறவுள்ளனர்.

* தமிழ்ப் படைகளுக்கான ஆட்சேர்ப்பு வடக்கில் தொடங்கிவிட்டதாக அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார்.

ஜனவரி 6

* புலிகளுடன் பேச்சு ஆரம்பிப்பதை வரவேற்றுள்ள பல கட்சிகளும், புலிகள் பேச்சுக்கு முன் ஆயுதங்களைக் கீழே வைக்க அவண்டும் என வலியுறுத்தியுள்ளன.

* காணாமற் போனோர் பற்றிய 3,500 குற்றச்சாட்டுகளை தாம் பெற்றுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் கூறியுள்ளது.

* தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் தமிழ்த் தேசிய ராணுவம், வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பு, தமிழர் தாயகம் பற்றிய அங்கீகாரம் என்ற அடிப்படையிலேயே பேச்சுகள் இனிமேல் நிகழலாம் எனக் கிட்டு கூறியுள்ளார்.

ஜனவரி 8

* தமிழகத்தில் 2,10,000 இலங்கையர் அகதிகளாக உள்ளனர்.

* புலிகள் 19தடவை யுத்த நிறுத்தத்தை மீறியதாக அரசு அறிவித்தது.

* சுங்க உயரதிகாரி ஒருவர் தொடுத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்க்கை எப்போதும் அமைதியாகவும் நேர்பாதையிலேயும் செல்லுவதாகவும் இருக்கிறது. எனக்குப் பெரிய இன்பங்களோ பெரிய துன்பங்களோ தெரியாது. இது நேர்ந்தது என்று சொல்லும்படியாக எனக்கு ஒன்றுமே நேர்ந்ததில்லை."

"உண்மையிலேயே நேர்ந்ததில்லையா?" என்றேன் நான். "உண்மையாகவா? ஞாபகப்படுத்திப் பார்- ஏதாவது...? எனக்காக சற்று சிரமப்பட்டு ஞாபகப்படுத்திக் கொண்டு பார். உன் வாழ்க்கையில் எதுவுமே நேர்ந்ததில்லை என்று சொல்வதை நம்பமுடியவில்லையே!- எப்படித்தான் இதை உன்னால் சகித்துக் கொண்டிருக்க முடிந்ததோ!"

வெகு சிரமப்பட்டு அந்த சாதாரண சராசரி மனிதன் மரியாதை தவறாமல் பதில் சொன்னான். "என் வாழ்க்கையில் எதுவுமே நேர்ந்ததில்லை என்று நீ நம்பலாம். நேர்ந்ததே கிடையாது. இன்றிரவு வரையில் ஒன்றுமே நேர்ந்ததில்லை. உன்னை சந்தித்ததுதான் ஐயா என் வாழ்க்கையில் முதல் சம்பவம்... வேறு ஒன்றுமே எனக்கு நேர்ந்ததில்லை. எழுதுவதற்கு ஏதாவது வேணுமானால் அதைப்பற்றி எழுதேன்."

நான் பதில் சொல்லும் வரையில் காத்திருக்காமல் அவன் போய்விட்டான். தொப்பியை எடுத்து வணங்கிவிட்டுத்தான் போனான். மாயத்தால் கட்டுண்டவன்போல நான் அசையாமல் சில வினாடிகள் அங்கேயே நின்றேன். ஆனால் நான் என் கதையை எழுதவில்லை. அன்றிரவுமுதல் எனக்கு இந்த சாதாரண 'சராசரி' மனிதனைப் பார்த்து முன்போல சிரிக்கச் சக்தி இல்லாமலே போய்விட்டது!

– நன்றி:- ஐரோப்பியச் சிறுகதைகள்-



<u>இஸ்ரேலின் சாதனை</u>

1990ம் ஆண்டு இஸ்ரேலில் குடியேறியவர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டால் ஏதோ உலக சாதனை நிலைநாட்ட முயற்சி எடுக்கப்படுவதாக நினைக்கத் தோன்றுகிறது.

இந்த ஒரு வருட காலத்தில் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பேர் இஸ்ரேலில் குடியேறியுள்ளனர். இதில் 90 வீதமானோர் சோவியத் நாட்டில் இருந்து வந்தவர்கள். இவ்வருடம் (1991) நான்கு லட்சம் பேர் வரை இவ்வாறு குடிவரவுள்ளனர் என எதிர்பார்க்கப் படுகிறது.

'Jewish Agency' எனப்படும் ஸ்தாபனமே இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. கணிசமான அளவு அரச உதவியுடன் இயங்கும் இவ்வமைப்பு 1992ம் ஆண்டிற்கிடையே சோவியத் நாட்டில் உள்ள பத்துலட்சம் யூதர்களை இஸ்ரேலில் குடியேற்றுவதைச் சவாலாக ஏற்றுள்ளது. இவ்வாறு குடிவருபவர்களுக்கு இஸ்ரேல் அரசு சகல உதவிகளையும் செய்து வருகிறது.

பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பலஸ்தீன மக்களை அடித்து விரட்டி, கொலை செய்து தமது ஆதிக்கத்தை விரிவாக்கிவரும் இஸ்ரேலால் கதிகலங்கிப் போயுள்ள பலஸ்தீனர்கள் மேலும் பல லட்சக் கணக்கான யூதர்களின் வருகையால் மேலும் அச்சமடைந்துள்ளனர். ◘

www.tamilarangam.net

பெண்ணுக்கு ஒன்பது வயதாகிறது - அவள் உபாத்தியாயினி ஆகப்போகிறாள். நான் ரொம்ப அமைதியாக வாழ்கிறவன் - எனக்கு கவலைகளோ ஆசைகளோ கிடையாது. தினம் காலையில் எட்டு மணிக்கு எழுந்திருக்கிறேன், மாலையில் தினம் ஒன்பது மணிக்கு கஃபேக்குப் போவேன். அங்கு சீதோஷ்ண ஸ்திதி, சண்டை, சர்க்கார் இவைகளைப்பற்றி என்னுடைய சகோதர குமாஸ்தாக்களுடன் பேசுவேன். அவ்வளவுதான். நீ கேட்டதையெல்லாம் சொல்லி விட்டேன். என்னை மன்னிக்க வேணும். நான் போகலாமா!

ஏற்கெனவே நான் வீடு திரும்ப வேண்டிய காலம் கடந்து பத்து நிமிடமாகிவிட்டது..."

இதையெல்லாம் அமைதியாகச் சொன்னதும் அவன் நகர்ந்தான். ஒருநிமிடம் நான் நடுங்கி பயந்தவனைப்போல் நின்றேன். அவன் வாழ்க்கையைப் பற்றி எண்ணும்போது- தினம் ஒரேமாதிரியான, சாதாரண, மாறாத வாழ்க்கையைப்பற்றி எண்ணும்போது எனக்குக் கசப்பும் துக்கமும் தோன்றிற்று. அந்தச் சாதாரண தன்மையை எண்ணிப் பார்க்கும்போது அது எனக்குப் பயங்கரமானதாகப் பட்டது. வந்த அழுகையை அடக்கிக் கொண்டு ஓடிவிடலாமா என்று தோன்றிற்று. ஆனால் நான் அசைவற்று அங்கேயே நின்றேன். எனக்குள்ளேயே நான் சொல்லிக் கொண்டேன். "இதே... இவன்தான் புகழ்பெற்ற 'சாதாரண' சராசரிப் பொதுஜனம். பைத்தியக்காரர்களைப் போல அறிவாளிகளும் விஞ்ஞானிகளும் உழைப்பதும் ஒருவரையொருவர் தூஷித்துக் கொள்வதும் இவன் பொருட்டுத்தான். இவன்தான் 'மாடல்' மனிதன், பொதுஜனத்தின் சின்னம்; தற்கால வாழ்க்கையின் உண்மை நாயகன் இவன்தான்; பெரிய சுவரில் சிறுகல் இவன்தான்; பெரிய யந்திரத்தின் சின்ன உருளை இவன்தான். மனிதனுக்கு ஒவ்வாத கதைகளும் கற்பனைகளும் செய்யாதவன் இவன்தான். இந்தமாதிரி ஒருமனிதன் இருக்க முடியாது என்றே நான் எண்ணி இருந்தேன். ஆனால் இவன் என்முன் நிற்கின்றான். வர்ணமற்ற, சுவாரஷ்யமற்ற, சாரமற்ற இவன் வாழ்க்கையின் சந்தோஷம் எவ்வளவு பயங்கரமானது!" ஆனால் நான் இப்படித் தொடர்ந்து சிந்தனைசெய்து முடிக்கும்வரை காத்துக் கொண்டிருப்பதாய் இல்லை. நகர்ந்து போய்விட முனைந்தான். ஆச்சரியத்துடன் ஆனால் அறிந்துகொள்ள முடிந்ததை எல்லாம் அறிந்துகொண்டு விடலாமே என்று நான் அவனை விடாமல் தொடர்ந்து கேட்டேன். "ஆனால் உண்மையில் உன் வாழ்க்கையில் ஒன்றுமே கிடையாதா? உண்மையாகவே கிடையாதா? உனக்கு எதுவும் நேர்ந்ததே இல்லையா? உன்னை யாரும் கொல்ல முயற்சித்ததில்லையா? உன் மனைவி உன்னை ஏமாற்றி யாராவது சோர புருஷனுடன் போனதில்லையா? ஆபீசில் உன்னை உன் அதிகாரிகள் தொந்தரவு செய்ததில்லையா? ஏதாவது?..."

"இல்லை; இம்மாதிரி எல்லாம் எனக்கு ஒன்றுமே நேர்ந்தது கிடையாது." என்றான் அவன். அவன் மரியாதையாகத்தான் சொன்னான் எனினும் அவன் குரலில் இதென்ன தொந்தரவு என்று அவன் மனம் நினைப்பதுபோல் தொனித்தது. "நீ சொன்னமாதிரி எதுவும் என் வாழ்க்கையில் கிடையாது. என்

www.tamilarangam.net



ஹொலிவூட்

இன்று ஐரோப்பிய மற்றும் இத்தாலிய திரைப்படத் துறைகட்கு அமெரிக்க ஹொலிவூட் திரைப்படத் துறை அச்சுறுத்தலாக விளங்குகிறது.

ஹொலிவூட் தயாரிப்பு படங்களாக ஐரோப்பியப் படங்கள் போட்டி போட முடியாதுள்ளன. ஹொலிவூட்டில் வருடம் 500 படங்கள் தயாராகின்றன. ஏறத்தாழ இதே அளவு படங்கள் ஐரோப்பாவில் தயாராகின்றன. ஹொலிவூட்டில் ஒரு படத்துக்கு தயாரிப்புச் செலவு 20 லட்சம் டொலராக இருக்கும்போது ஐரோப்பாவில் இது 60 லட்சம் டொலராக இருக்கிறது. இந்த செலவு வித்தியாசமே ஐரோப்பியப் படங்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு 'நவ யதார்த்தவாத' திரைப்படத் துறையாக இருந்த இத்தாலிய திரைப்படத் துறை கடந்த பத்து வருடத்தில் 300 லட்சம் டொலர்களை இழந்துள்ளது.

திரைப்பித்தன்

---

*பதினாறு வயதில் நான் அதிக சிரமமில்லாமல் ஆரம்பப் பரீட்சையில் தேறிவிட்டேன். நடுத்தரப் பள்ளிக்கூடம், உயர்தரப் பள்ளிக்கூடம் இரண்டையும் நான் காலக்கிரமத்தில் தாண்டினேன். பத்தொன்பதாவது வயதில் சர்வகலாசாலையில் சேர்ந்தேன். இருபத்தினாலாவது வயதில் பட்டம் பெற்றேன். எவ்விதத்திலும் ரொம்பக் கெட்டிக்காரன் என்றோ ரொம்ப அசடு என்றோ பெயர் வாங்கவில்லை. பட்டம் பெற்றபின் என் தகப்பனார் எனக்கு ஒரு ரெயில்வே ஆபீசில் வேலை வாங்கித் தந்தார்; கல்யாணத்துக்கும் ஏற்பாடு செய்தார். தினம் ஆபீசில் நான் எட்டு மணிநேரம் வேலை செய்கிறேன். நான் செய்யும் வேலைக்கு பொறுமையையும் ஞாபகத்தையும் தவிர வேறொன்றும் தேவையில்லை. ஆறு வருஷங்களுக்கு ஒருதரம் என் சம்பளம் இருநூறு லிரே உயருகிறது. என்னுடைய அறுபத்தினாலாவது வயதில் நான் 3,453 லிரே 62 செண்டுகள் உதவிச் சம்பளம் பெறுவேன் என்று எனக்குத் தெரியும். எனக்கென்று என் தகப்பனார் பார்த்திருந்த பெண் எனக்கு நன்கு பிடித்திருந்தாள். ஆகவே ஒரு வருஷம் காதல் புரிந்தபின் நான் அவளைக் கல்யாணம் செய்துகொண்டேன். ஆனால் நாங்கள் பரஸ்பரம் அன்பைப் பற்றிப் (sentiment) பேசிக் கண்ணீர் விடுவதோ சந்தோஷப் படுவதோ கிடையாது. நான் வாரத்துக்கு மூணுதரம் தவறாமல் அவளைப் போய்ப் பார்ப்பேன். வருஷத்துக்கு இரண்டுதரம் - கிறிஸ்மஸ் தினத்தன்றும், அவள் பிறந்த தினத்தன்றும் - அவளுக்கு வெகுமதி கொடுத்து முத்தமிட்டுவிட்டு வருவேன். அவளால் எனக்கு இரண்டு குழந்தைகள்- ஒரு ஆணும் ஒரு பெண்ணும் - பிறந்திருக்கின்றன. பையனுக்கு வயது பத்தாகிறது - அவன் என்ஜினியராகப் போகிறான்.*

www.tamilarangam.net

முடியாமல் இருந்தது. அவன் அழகனா, குரூபியா என்றுகூட நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. அவன் கண்களில் அமைதி இருந்தது. மீசையைச் சீராக வைத்திருந்தான். நல்ல தடித்த போர்வையை இழுத்துப் போர்த்தி உடம்பை மூடிக் கொண்டிருந்தான்.

அவன் என்னைத் தாண்டி நாலடிதான் போயிருப்பான். ஆனால் நான் அவனைப் பின் தொடர்ந்து போய் அவனை நிறுத்தினேன். அவனுக்குப் பயத்தால் தூக்கிவாரிப் போட்டது. திடுக்கிட்டு நின்றான். அடி எதுவும் மேலே விழுந்து விடாமல் தடுத்துக் கொள்ள விரும்பியவன் போல் கைகளைத் தலைக்கு மேல் தூக்கினான். ஆனால் நான் உடன் அவன் பயத்தைத் தெளிவித்தேன். மிகவும் மிருதுவான குரலில் "பயப்படாதே" என்றேன். " நான் கொலைகாரன் அல்ல; திருடனும் அல்ல; பிச்சைக்காரனும் அல்ல. ஆனால் பிச்சைக்காரன் அல்ல என்று சொல்லுவதற்கும் இல்லை. ஆனால் உன் பணம் காசு எனக்குத் தேவையில்லை. எனக்கு வேண்டியது ஒன்றுதான். அதனால் உனக்கு ஒரு நஷ்டமும் கிடையாது - உன் வாழ்க்கைச் சரித்திரத்தை நீ எனக்குச் சொல்லவேணும்" என்றேன்.

கண்களைப் பரக்கத் திறந்து கொண்டு அவன் இரண்டடி பின்னிட்டான். நான் பைத்தியக்காரன் என்று அவன் நினைக்கிறான் என்று எனக்குத் தெரிந்துவிட்டது... அதனால்தான் வெகு அமைதியாக மேலும் சொன்னேன். "நான் நீ நினைப்பது போலப் பைத்தியக் காரன் அல்ல. கிட்டத்தட்ட அதேமாதிரிதான் எனினும் பைத்தியக்காரன் அல்ல. நான் ஒரு இலக்கியாசிரியன். நாளைக் காலைக்குள் நான் ஒரு கதை எழுதியாகவேணும். இல்லாவிட்டால் நாளை முழுவதும் பட்டினி கிடக்க நேர்ந்துவிடும். ஆகையினால் தான் நான் உன் சரித்திரத்தைக் கேட்க விரும்புகிறேன். நீ யார், என்ன செய்கிறாய்- இதுபோல உன்னைப் பற்றியது எல்லாவற்றையும் நீ எனக்குச் சொன்னால் நான் அதை வைத்து ஒரு கதை எழுதிவிடுவேன். உண்மையில் நீ, உன் ஆன்மாதான் எனக்கு வேண்டியது. உன் உண்மை ஆத்மாவை ஒளிக்காமல், உன் வாழ்க்கை வரலாற்றை எனக்குக் கூறு... எனக்கு இந்தச் சகாயம் செய்ய மறுக்காதே, ஏழைக்கு இது ஒரு பெரிய உதவி... உன்னைத்தான் தேடி நான் இவ்வளவு நாழிகை காத்துக் கொண்டிருந்தேன். நீ சொல்லும் விஷயத்தை வைத்து நான் உலகத்திலேயே மிகச் சிறந்த இலக்கியத்தை சிருஷ்டி செய்தாலும் செய்வேன்..."

நான் சொன்னது அவன் மனதில் பதிந்தது என்று அவன் முகத்தில் தெரிந்தது. பயத்துக்குப் பதில் அவன் முகத்தில் என்னிடம் பரிதாபம் தோன்றிப் படருவதை நான் கண்டேன்.

"ஓ! சரிதான்... என் வாழ்க்கை வரலாற்றை நீ கேட்க விரும்புகிறாய், அவ்வளவுதானே, சுலபமாகச் சொல்லிவிடக் கூடியதுதான். அதில் அதிக கோணலோ வளைவுகளோ கிடையாது. எளிய சாதாரண வாழ்க்கைதான் என்னுடையது. நான் முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன் பிறந்தேன். என் பெற்றோர் சாதாரண பணக்காரர்கள்; கௌரவமும் மரியாதையும் உள்ளவர்கள். நாணயமாக வாழ்க்கை நடாத்தியவர்கள். என் தகப்பனாருக்கு வியாபாரத் தொழில். என் அம்மாவுக்கு கொஞ்சம் ஆஸ்தி இருந்தது. நான் ஒரே பிள்ளை. ஆறுவயதில் பள்ளிக்கூடம் போனேன்.

www.tamilarangam.net

வருவான் என்று காத்திருந்தேன். காற்று விசிறி விசிறி அடித்தது; தெரு விளக்கு அணைந்துவிடும் போலக் காற்றில் தவித்துத் தவித்துப் புத்துயிர் பெற்றது. இரவு வெகு நேரம் ஆகிவிட்டபடியால் தெருவில் நடமாட்டமேயில்லை. அந்தக் காற்றில் ஜனங்கள் வெளியே நடமாட சாதாரணமாகப் பயப்படுவார்கள். தெருவின் அமைதியையும் மௌனத்தையும் குலைக்கும் நிழல்களின் நடமாட்டம் வரவரக் குறைந்துகொண்டே வந்தது. கடைசியில் நான் காத்துக் கொண்டிருக்கும் விளக்கருகில் ஒருவன் வந்தான். அவனைக் கண்டவுடனேயே அவன்தான் நான் தேடிக் கொண்டிருக்கும் பிரகிருதி என்று எனக்குத் தெரிந்து விட்டது. அவன் வயது என்ன இருக்கும்? கிழவனா, வாலிபனா என்று நிர்ணயிக்க

---

## றிச்சர்ட் டி சொய்சா

## - உதிர முடியாத ஒரு நினைவு -

சில பகல் நீளும்
வெயிலோடு.
நினைவு துரத்தி ஊர்செல்லும்
உடலிங்கே
இருந்தாலும்.

அலைந்தெறியும்
கடலின் கைகள்
உன்னை ஒருநாள்
பிணமாய்க் கரைசேர்த்தன.

நுரைத்தெறியும் நினைவு.
முகங்களை மூடிய
மனிதர்களிடையே
முகம் இழக்காதவன் என
வாழ்ந்தனை.

பொய்களைப் பேசிப்
பொய்களைப் புணர்ந்த
மனிதர்களிடையே
மெய்முகம் காட்டினாய்.

அச்சம் சூழ்ந்த இருளில்
அவர்கள் உன்னிடம் வந்தனர்.
இரண்டு கொம்புகள்,
எருமை வாகனம்,
காக்கி உடைகள்.

மறுநாள் புலர்கையில்
இந்து சமுத்திரம்
எறிந்த கைகளில்
உன் உடல் இருந்தது
முகம் சிதைந்து.

யார் முகம்
சிதைந்தது?
ஒற்றை அலை
உனதுடல் சுமக்கும்.

பிறகு தொடரும்
பெரிய அலைகள்
சமுத்திரத்தின் மறுகரைவரை,
உலகின் மறுமுனைவரை.

- இளவாலை விஜயேந்திரன் -

www.tamilarangam.net

உத்தேசத்துடன் நடந்தேன். நான் வேகமாகவே நடந்தேன். என்னை எதிர் நோக்கி வந்தவர்கள் முகத்தை எல்லாம் கூர்ந்து கவனித்தேன். திருப்திகரமான, எனக்குத் தேவையான ஆசாமியா என்று கவனித்துக் கொண்டே நடந்தேன். அப்புறம் கொள்ளைக்காரன் மாதிரி நான் ஒரு நாற்சந்தியில் நின்று போவார் வருவார்களைக் கவனித்தேன். ஒரு சாதாரண மனிதன் வருகிறானா - தனக்கு தன் ஜீவியம் முழுவதும் சொல்லக்கூடிய ஒருவன் வருகிறானா என்று பார்த்துக் கொண்டு நின்றேன்.

நாற்சந்தி விளக்கை தனியாக முதலில் ஒருவன் அணுகித் தாண்டினான். அவன் நடுத்தர வயதினன். ஆனால் நான் அவனை அணுகி நிறுத்தவில்லை. அவனது முகத்திலே இருந்த சுருக்கங்களும் பார்வையும் அவன் அப்படி ஒன்றும் சாதாரண மனிதன் அல்ல என்று எனக்கு அறிவுறுத்தின.

எனக்கு வேண்டியது சாதாரண ரொம்பவும் சாதாரண மனிதன்தான். அவனுக்கப்புறம் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு ஒரு வாலிபன் என்னைத் தாண்டிப் போனான், அவனையும் நான் நிறுத்தவில்லை. அவன் தலைமுடி நீளமாகக் காற்றில் பறந்துகொண்டிருந்தது. அவன் கண்கள் கஞ்சாப் பழக்கம் உள்ளவன் கண்கள் போலிருந்தன. அவன் சாதாரண மனிதன் அல்ல என்று எனக்குத் தெரிந்துவிட்டது. மூன்றாவதாக என்னைத் தாண்டிச் சென்றவன் ஒரு கிழவன். டீக்காக க்ஷவரம் செய்து கொண்டிருந்தான்; அவன் வாய் ஏதோ தெற்கத்திப் பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தது; அவன் தெற்கே வாலிபத்தில் குஷியாக வாழ்ந்தவனாக இருப்பான். அவனால் எனக்கு ஒரு பயனும் இல்லை என்று நான் அணுகவில்லை.

எனக்கு அப்போது எவ்வளவு ஆத்திரமும் எரிச்சலும் வந்தது என்று என்னால் இப்போது சொல்ல முடியாது. நாற்சந்தியில் நின்று கொண்டிருந்தேன் கொள்ளைக் காரனைப் போல, திருடனைப் போல; உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் ஏக்கத்துடனும். எனக்கு முன்பின் தெரியாத ஒருவனின் வருகைக்காகக் காந்திருந்தேன்; எனக்கு முன்பின் தெரியாத ஒருவனிடம் இலக்கியப் பிச்சை கேட்டு அவனை என் கற்பனைக்கு இலக்காக்கிக் கொள்ளக் காத்திருந்தேன். விதி என்னுடன் விளையாட மனம் கொண்டது போலும். என்னைத் தாண்டிப் போனவர்கள் எல்லாரும் எனக்கு உபயோகப் படாதவர்கள்தான். அப்போது என் கண்முன் தோன்றியவர்கள் எல்லாம் அசாதாரணமானவர்கள்; ஏதோ ஒரு விஷயத்தில் அசாதாரணமான வாழ்க்கை நடத்தியவர்கள் என்பது அவர்களின் முகத்திலே தெரிந்தது. இதற்கு முன் நான் சாதாரணமானவர்கள் பலரைச் சந்தித்திருக்கிறேன். அவர்களைக் காணும்போதே எனக்கு வெறுப்பாக இருக்கும். பன்றி போன்ற முகமும், சிவந்த கன்னங்களும், கண்களில் உயிரற்ற தன்மையும் உடையவர்களைக் கண்டு அதற்கு முன் நான் எவ்வளவோ தரம் நகைத்திருக்கிறேன்.... இப்போது அவர்களில் ஒருவராவது முன்வர மறுக்கிறார்களே!...

ஆனால் அந்தநாட்களில் எனக்குப் பிடிவாதமும் இருந்தது; தைரியமும் இருந்தது. ஆகவேதான் வெகு நேரம் எனக்கு வேண்டிய சாதாரண மனிதன்

www.tamilarangam.net

யோசித்துக்கொண்டே நாலேகால் மணி நேரம் நான் வீண் பொழுது போக்கினேன். என் மனதில் சூனியந்தான் இருந்தது. என் கற்பனை ஓடவில்லை. என் மூளையோ அதிகம் யோசித்துக் களைத்து அலுத்துப் போய்விட்டது. எதுவும் எழுதவேணும் என்கிற யோசனையை ஒழித்துவிட்டு என் கையிலிருந்த கடைசி காசுகளை ஓட்டல்காரனிடம் கொடுத்துவிட்டு வெளியேறினேன். வெளியே வந்தவுடன் என் மனதில் ஒரு வாக்கியம் தானாகவே உதித்தது. ஒன்றும் புதுசல்ல; எவ்வளவோ தரம் எல்லோரும் கேட்டிருக்கக்கூடிய வாக்கியம்தான் அது. நானே அதை பத்துப் பனிரெண்டு தரம் கேட்டிருப்பேன். யார் சொல்லியது என்று எனக்கு ஞாபகமில்லை. "யாராவது ஒருவன், அவன் எவ்வளவு சாதாரண மனிதனாக இருந்தாலும் சரி, தன்னுடைய ஜீவியம் பூராவையும் எழுதிவைத்தால் அவன் எழுதியது உலகத்து நாவல்களிலே சிறந்த ஒன்றாக இருக்கும். "ஒரு பத்து நிமிஷம் இந்த வாக்கியத்தைத் தவிர என் மனதில் வேறு ஒன்றுமில்லை. மனதைவிட்டு அது அகல மறுத்தது. அதை எப்படி நான் உபயோகிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் என் வீட்டை நெருங்கும்போது திடீர் என்று நான் என்னையே கேட்டுக் கொண்டேன். "ஏன் அப்படிச் செய்யக்கூடாது? யாராவது ஒருவனுடைய சரித்திரத்தை நீ ஏன் எழுதக்கூடாது?" - யாராவது ஒருவன், நீ தெருவில் சந்திக்கும் முதல் சாதாரண மனிதனின் ஜீவியத்தை எழுதுவது... நான் சாதாரண மனிதன் அல்ல; நான் இலக்கியாசிரியன்; தவிரவும் என்னைப் பற்றியே எவ்வளவோ கதைகளில் எழுதியாய் விட்டது; புதுசாகச் சொல்ல ஒன்றுமில்லை. இப்பொழுது யாராவது ஒருவனை நான் கண்டுபிடிக்கவேணும் - யாராவது ஒருத்தன். எனக்கு முன்பிற் தெரியாதவன். ரொம்பச் சாதாரணமான மனிதன். அவன் ஜீவியத்தில் எதையும் விடாமல் எனக்கு அவனைச் சொல்லவைக்க வேணும். அவன் செய்திருப்பது எல்லாவற்றையும் அறிந்துகொள்ள வேணும். நான் ஒரு மனிதனின் ஆத்மாவை இன்று இரவே வந்து அறிந்துகொள்ளவேணும்... நான் யாரிடமும் பணப்பிச்சை கேட்கவில்லை. ஆனால் ஒருவனுடைய ஜீவிய சரிதத்தை அவனிடமிருந்து பிச்சை கேட்டு வாங்கிவிடவேணும்...."

ரொம்ப அசாதாரணமான காரியம்தான். ஆனால் ரொம்பவும் எளியது. நான் உத்தேசித்திருந்தபடி உடனே செய்துவிடுவது என்று தீர்மானித்தேன். வீட்டுப் பக்கம் போய்க் கொண்டிருந்தவன் திரும்ப நகரின் மத்திய பிரதேசத்தை நோக்கி நடந்தேன். இரவு நாழியாய் விட்டது. எனினும் அங்கு இன்னும் ஜன நடமாட்டம் இருக்கும். பிச்சைக்காரர்களில் ஒரு புதுப் பிச்சைக்காரனாக யாரையாவது அணுகி இலக்கியப் பிச்சை கேட்கும்

---

## இரண்டாவது பிறப்பு

அருந்ததியின் பதினொரு கவிதைகள் கொண்ட தொகுதி. வெளியீடு: ஈழம் கலைகள் சமூக விஞ்ஞானக் கழகம். ASSEAY, 3Alles Paul Leautaud, 95200 Sarcelles, FRANCE

---

www.tamilarangam.net

இத்தாலியச் சிறுகதை

# இலக்கியப் பிச்சை

கியோவன்னி பாபினி

தமிழில்—
க.நா.சுப்பிரமணியம்

அஸ்தமிக்க வெகு நேரம் இருக்கும்போதே நான் என் கையிலிருந்த கடைசி காசுகளை காபி சாப்பிடுவதில் செலவழித்துவிட்டேன். ஆனால் காபி சாப்பிட்டுச் சாப்பிட்டுப் பழக்கப்பட்டுப் போயிருந்த என் நாக்குக்கும் உள்ளத்துக்கும் மனதுக்கும் அந்தக் கப் காபி நான் எதிர்பார்த்த அளவு உற்சாகம் அளிக்கவில்லை. எனக்கு நல்ல பசி. எப்பொழுதுமே பசிதான். வயிற்றுப் பசி மட்டும் அல்ல. மனதிலும் புகழ் சம்பாதிக்க வேணுமென்று ஓர் அகோரப் பசி. என்னைப் பற்றிக் கவலைப் படுபவர்கள் ஒருவரும் கிடையாது. ஒரு பத்திரிகை ஆசிரியன் - அவன் நெட்டையாக இருப்பான்; அதிகம் பேசமாட்டான். பிரசுரிக்க வேறு எதுவும் அகப்படாதபோது என் கதைகளை அங்கீகரித்துப் பிரசுரிப்பான். நான் எவ்வளவு நீண்ட கதை எழுதினாலும் சரி, எவ்வளவு நல்ல கதை எழுதித் தந்தாலும் சரி - எனக்குச் சன்மானமாக ஐந்து லிராக்கள்தான் கொடுப்பான்.

ஜனவரி மாதத்தில் ஒரு நாள். அன்று மாலை வேளையில் காற்றுடன் சப்தமும், தூரத்து மணிகளின் சப்தமும் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. இந்த மணிகள்தான் ஏனிப்படி ஒரே மாதிரிச் சப்தம் செய்து மனதைத் துன்புறுத்தவேணும்! பெரிய ஓட்டலுக்குப் போய் காபியை மெதுவாகச் சாப்பிட்டுக் கொண்டே வெகுநேரம் உட்கார்ந்திருந்தேன். ஓட்டலில் ஒரே வெளிச்சமாக இருந்தது. என்னைச் சுற்றிலும் துக்கம் நிறைந்தது போன்ற கண்களையுடைய ஜனங்கள் போய் வந்து கொண்டிருந்தார்கள். மனதில் ஏதாவது ஒரு கதையைக் கற்பனை செய்ய நான் முயன்று கொண்டிருந்தேன். ஒரு கதையின் சிந்தனை உதயமாகிவிட்டால் இரண்டு நாள் சாப்பிடப் போதியது சம்பாதித்து விடலாம். அன்று மாலை எழுதிக் கொண்டுபோய்ப் பத்திரிகாசிரியரிடம் கொடுத்துவிட்டுக் கையில் முற்பணமாக காசில்லாத சமயத்தில் ஏதாவது வாங்கிக் கொண்டு வரலாம்; ஒருவேளைச் சாப்பாட்டுக்குப் போதியதாவது அவன் முன்பணம் தருவான். அதனால்தான் அந்த ஒருவேளை நல்ல சாப்பாட்டை எண்ணிக்கொண்டு நான் கதையைக் கற்பனை செய்துவிடவேணும் என்று அவ்வளவு தீவிரமாக முயன்று கொண்டிருந்தேன். கற்பனையில் உதிக்கும் முதல் சிந்தனை போதும்; அதை வைத்துக் கொண்டு போதிய பக்கங்களை நிரப்பிக் கொண்டுபோய்ப் பத்திரிகாசிரியனிடம் கொடுத்துவிடுவேன் ...... ஒருவேளை நல்ல சாப்பாடு சாப்பிடலாம்......

கதைக்கு ஏதாவது நல்ல விஷயம் அகப்படுமா என்று இப்படி

www.tamilarangam.net

அதாவது, சோசலிசம்- முதலாளித்துவம் இவ்விரு முறைமைகளில் எதைத் தெரிவுசெய்வது என்பதாகும்.

* சர்வ நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி.

நாட்டில் நிலச் சுவாந்தர்கள் உருவாகக்கூடிய வாய்ப்புகளும், வாழ்க்கைத்தரம் மிகவும் மோசமான நிலமைக்குச் செல்கின்ற தன்மைகளும் மற்றும் பஞ்சம், உள்நாட்டுப்போர் ஏற்படக்கூடிய சூழ்நிலைகளும் காணப்படுகின்றன. பாராளுமன்றம் அதன் போக்கை மாற்றக்கூடிய நிலையில் இல்லை. ஜனாதிபதி ஒருவரே புத்திஜீவிகளுக்கும் அரசுக்கும் பாராளுமன்றத்துக்கும் பாராளுமன்றம்- மக்களுக்கு ஊடகமாக இருப்பதோடு அவர் ஒருவரே எவ்வாறான தலைமைத்துவம் பின்னர் இருக்க வேண்டும், எந்த சமூகஅமைப்பு அதற்குத் தயாராக வேண்டும் என்பவைகளை உணரக்கூடிய சர்வநிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டவராக இருக்கிறார்.

* சர்ச்சைகளும் சமூகங்களும்.

குடியரசுகளுக்கு இடையிலான அரசுரிமை தொடர்பான வாக்குரிமைகள் அரசியல் சதுரங்கத்தில் வெறும் பகடைகளாகவே இருக்கின்றன. மத்திய அரசுக்கும் ரஷ்ய சமஷ்டிக் குடியரசுக்கும் இடையிலான இன்றைய மோதல்கள் ஓரளவு அனுகூலமான பிரதிபலன்களை உருவாக்கி வருவதோடு, குடியரசுகள் பலம்வாய்ந்தவைகளா அல்லது ஜனாதிபதி பலம்பொருந்தியவரா என்கின்ற சர்ச்சைகள் ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. தற்போதைய கட்டத்தில் தேவைப்படுவது பரஸ்பர புரிந்துகொள்ளலும் ஒத்துழைப்புமாகும். ●

லெனின் பற்றி ரஷ்யர்கள்

1917ஆம் ஆண்டு உலகைக் குலுக்கிய போல்ஷிவிக் புரட்சியைப்பற்றி தற்போது சோவியத் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி அறியும்பொருட்டு ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு மக்கள் கணிப்பீட்டை மேற்கொண்டது. வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 2000பேரிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. இதில் 52.2% ஆனோர் இந்தப் புரட்சி சரியானது என்றும் இது தமது வரலாற்றுக் காலத்தின் வளர்ச்சியுமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மாபெரும் புரட்சியை வழிநடாத்தியவரும் சோஷலிச சோவியத்தி ரஷ்யாவின் ஸ்தாபகருமான லெனினை 76.1% ஆனோர் தாம் இன்னமும் நேசிப்பதாகக் கூறியுள்ளனர். 9.5%ஆனோர் லெனின்பற்றி அதிருப்தி கொண்டுள்ளனர். இதில் குறிப்பாக 35%ஆன மொஸ்கோவாசிகள் லெனின் பற்றி அதிருப்தி கொண்டுள்ளனராம்.

- தமிழவன் -

காற்று

மௌ.சித்தார்த்தன் (15வயது) எழுதிய கவிதைகளின் தொகுதி நுஃமானின் முன்னுரையுடன் வெளிவந்துள்ளது. விலை ரூ.15. வெளியீடு, அயோத்தி நூலகசேவை, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

www.tamilarangam.net



V. BOGORAD V. BOGORAD

ஆரம்பத்தில் கடினமே. அது உரியமுறையில் நடைமுறைப் படுத்தப்படும்போது உறுதியான முதலீடுகள் மற்றும் சரிக்கட்டல்கள் என்பவைகள்மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

* புதியவடிவம்.

"சுரண்டல்" எனும் சொல் சட்டக்கோவையில் இருந்து நகர்த்தப்பட்டுள்ளது. ஆனால் அதன் சாயல்கள் எங்கும் வியாபித்துவிட்டன... சுருங்கச் சொல்லின் நடைமுறையில் அதற்கு வேறொரு வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுமீதான சட்டம் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் வியாபாரம் மற்றும் கொள்வனவுகள் குறிப்பிட்ட காலத்துக்கு தடை(ச்)செய்யப்பட்டன. பாரிய அளவில் வரிசெலுத்தும் (மறைமுகமாகவும் வெளிப்படையாகவும்) வெளிநாட்டவர்க்கு வியாபாரம் திறந்துவிடப்பட்டது. வேறோர் முறையில் சொல்வதானால் ரஷ்ய சாம்ராஜ்ஜியத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் குரூர சட்டங்கள் தற்போது நிலவும் சட்ட அனுஷ்டானங்கள் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

* தெரிவு

பொருளியல் நிபுணர்களான அபால்சின், சடாலின், அபான்பேஷியன், யாவ்லின்ஸ்கீ ஆகியோரைக் கொண்ட குழுவே பொருளாதார நிகழ்ச்சி தொடர்பாக செயற்படுகிறது. சந்தைப் பொருளாதார அமைவை நோக்கிய பாதை எவ்வாறு இருக்கவேண்டும் என அவர்களுக்கு இடையில் விகர்ப்பங்கள் காணப்படினும், வெளிப்படையாகக் கூறின் கடைசித் தெரிவு என்பது

அரசியல்வாதிகளைப் பொறுத்தே இருக்கிறது. சுப்ரீம் சோவியத் தெரிவுசெய்யப்பட்டு ஒன்றரை வருடங்களாகின்றன. பெரும்பான்மையான பாராளுமன்றப் பிரதிநிதிகளின் காதுகளில் "சுரண்டல்", "தனியார் மயமாக்கல்", "பதுக்கல் வியாபாரம்" போன்ற வார்த்தைகள் விழாமலில்லை. இதேநேரத்தில் இன்னொரு பிரச்சனையும் உருவெடுத்தவண்ணம் உள்ளது.

www.tamilarangam.net




G. BASYROV

சமஷ்டியை சமாளிப்பதற்கும், பொரிஸ் ஹெல்சிங் சகாக்களுடன் ஓர் உடன்பாட்டுக்கு வரவும், அரசின் முகமூடியைப் பாதுகாத்துக் கொள்வதற்குமே அது ஏதுவாக அமைந்தது.

* பணவீக்கமும் "500 நாட்களும்".

சோவியத் ஒன்றியத்தின் சுப்ரீம் சோவியத் கூட்ட அமர்வுகள் அதன் தெரிவில் தோல்வியைத் தழுவின. ஒன்றில் பிரதமர் ரிஷ்கோவுக்கும் தோழர் சடாலினுக்கும் இடையில் சமரச உடன்படிக்கையை ஏற்படுத்தி இருக்கலாம். ரஷ்ய சமஷ்டி "500 நாட்கள்" நிகழ்ச்சியை அமுலாக்குவதை சற்றுத் தள்ளிப்போட்டிருக்கும் அதேவேளையில் மத்திய அரசாங்கத்தை இராஜினாமா செய்யுமாறு கோரிவருகிறது. குடியரசின் கருத்துப்படி பணவீக்கம் எனும் வேதாளம் வெளிவந்துவிட்டதெனவும் இதனாலேயே "500 நாட்கள்" இக்கட்டான சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுமுள்ளது. இதேவேளையில் தனிப்பட்டவர்களுக்கு நிலவுரிமை அளிப்பதற்கான பொதுசன வாக்கொகுப்புமுறை ஒன்றை நடாத்தப் போவதாக ஜனாதிபதி வாக்குறுதி அளித்துள்ளார்.

* இரு கோட்பாடுகள்.

மக்கள் "தற்காலிக உத்வேகம்" எனும் நிலைக்கு உட்பட்டிருக்கிறார்கள். ரஷ்ய சமஷ்டிக் குடியரசானது நிகழ்சி தொடர்பான ஓர் உடன்பாட்டை எதிர்நோக்கும் அதேவேளை சுயாதீனமாக செயற்படுவதற்கான வழிகாட்டுதலும் அதற்கு அவசியமாகிறது. சிலரின் அபிப்பிராயப்படி இரு கோட்பாடுகளும் (18 மாதங்கள், 500 நாட்கள்) நாட்டுக்கு பொருத்தமற்றவைகளாகும். வேறுசிலரின் கண்ணோட்டம் இவ்வாறு இருக்கின்றது. அதாவது எந்தவொரு திட்டமும்

www.tamilarangam.net

மதவாதக் கொள்கைகள் என்பவைகள் முன்னுக்குப் பின் முரணான பிரதிபலன்களைத் தந்துகொண்டு இருக்கின்றன. அண்மையில் ஏற்படுத்தப்பட்ட ஆரம்பப் பொருளாதார நிகழ்ச்சிக் கோவையான "18மாதங்கள்" முதலாவதாக பிரதமர் ரிஷ்கோவின் கீழுள்ள அமைச்சுகளுக்கு உட்படுத்தப்பட்டது. அதன் முடிவுகள்

அவ்வளவுதூரம் வெற்றிகரமானதாக அமையவில்லை. அரசு தொடர்பான நம்பிக்கைகள் ஊசலாடத் தொடங்கிவிட்டன. அரச இராஜினாமா "கூப்பாடுகள்" பொது இடத்துக்கு வந்துவிட்டன. "18மாதங்கள்" நிகழ்ச்சிக் கோவை மழுங்கடிக்கப்பட்டு, சுப்ரீம் சோவியத்தும் அதன் அமைச்சரவையும் அதற்கு சாவுமணி அடித்துவிட்டன. இவ்வாறான சூழ்நிலையில் முன்வைக்கப்பட்டதுதான் "500நாட்கள்" திட்டமாகும்.

* <u>ஜனாதிபதியின் நடவடிக்கைகள்.</u>

இத்திட்டமானது நாடளாவிய அளவில் முன்வைக்கப்படவில்லை. குறிப்பாக ரஷ்ய சமஷ்டிக் குடியரசுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். ஏன் இன்னொரு நிகழ்ச்சிப் பட்டியல் என்கின்ற வினா எல்லோராலும் எழுப்பப்பட்டது. முரண்பாடுகள் குமுறிக்கொண்டிருந்த அதேவேளை அதற்கான பரிகாரங்கள் தேடுவதற்கான முயற்சிகள் ஜனாதிபதி மிக்கயில் கோர்பச்சோவினால் மேற்கொள்ளப்பட்டது. ரஷ்ய சம்ஷ்டிக் குடியரசின் தலைவரான பொரிஸ் ஹெல்சிங்குடன் "500நாட்கள்" தொடர்பான ஓர் இசைவான உடன்படிக்கைக்கு ஜனாதிபதி வந்தார். இவ்வாறான நிலையில் அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டமென்ன? ஒன்றில்

## காத்தான்குடி 90

இனி நடக்கப் போவது என்ன?

ஒன்றுமில்லை.

பிரார்த்தனைக் கூடத்தில்
சிதறுண்டிருக்கும் உடல்களின் மேல்,
அவற்றிடை
ஒரு ராட்சதக் கொலைக்கரம்
உருக்கிய குருதிச் சேற்றில்,
அந்தகாரத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும்
அலறலில்,

ஸ்தம்பிக்கிறது காலம்.

தமிழன் என்னும் என்
அடையாளக் கூறின் மேல்
வெட்கம்

இருள் விரவிப் படிகிறது.......

"என்னைக் கொல்லாதே"
என்று ஈரக் கண்களுடன் இரந்த
ஈழத்தின் மனச்சாட்சியையும்
கொன்றார்கள்.

-சிவா.கௌதமன்-

நன்றி: சரிநிகர்

அரசாங்கம் தோழர் சடாவினின் திட்டத்துக்கு ஒத்துப்போக வேண்டும் அல்லது ஜனாதிபதி நிர்வாகம் புதிய திட்டமொன்றை முன்வைக்க வேண்டும். ஜனாதிபதியின் நடவடிக்கை எவ்வாறானதென்று மிகச் சிலரே உணர்ந்து கொண்டனர். ரஷ்ய

www.tamilarangam.net

# சோவியத் ஒன்றியத்தின் சந்தைப் பொருளாதார முறையின் அறிமுகமும் அது தற்காலிகமாக எதிர்நோக்கும் அரசியற் பிரச்சனைகளும்...

- கங்கா புஷ்பாகரன் மேனன் -
(சோவியத் அரச பல்கலைக்கழகம்)



* பொருளாதார விடிவு

சந்தைப் பொருளாதார அமைப்பை நோக்கிய நகர்வு சிலவேளைகளில் சோவியத் ஒன்றியத்தின் மட்டில் பொருத்தமற்ற ஒன்றாகும் என்கின்ற ஐயப்பாடு நிலவுகிறது. நிகழ்கா( ) சூழ்நிலைகளும் அதன் தன்மைகளும் அதற்கு சான்றுபகர்வனவாக இருக்கின்றன. ஏனெனில், விஞ்ஞான பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும் எலியின் நிலைமையிலேயே மக்கள் காணப்படுகின்றனர். "பரீட்சார்த்தங்கள்-தவறுகள்" எனும் இரு அர்த்தங்களுக்கு உட்பட்டு ஒரு நிட்சயமற்ற இக்கட்டத்தில் மக்கள் தொகுதி சிக்கித் தவிப்பதை

நடைமுறையில் காணலாம். இருப்பினும் தற்பொழுது பொருளியல் வல்லுனரும் ஜனாதிபதி கவுன்சிலின் அங்கத்தவருமான தோழர் சடாலினனால் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் "500 நாட்கள்" என்னும் நிகழ்ச்சிப் பட்டியலின் பிரதிபலனைப் பொறுத்தே நாட்டின் தற்போதைய பொருளாதார சுபீட்சம் தங்கியுள்ளது.

* "18மாதங்கள்" நிகழ்ச்சிக் கோவையின் தோல்வி.

குறிப்பிட்ட காலக் கெடுதியில் தேசிய பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சி தொடர்பான சரிக்கட்டல்களை செய்யக்கூடிய நிலையில் எவருமே இல்லை. ஒருபுறம் பொருளியலாளர் சடாலினின் முன்னெடுப்புகள், அரசாங்கத்தின் அர்த்தமற்ற கோட்பாடுகள், சுப்ரீம் சோவியத்தின் நிச்சயமற்ற தன்மைகள், தேசிய ரஷ்ய சமஷ்டி அதிகாரங்களுக்கு இடையிலான மோதல்கள் மற்றும் ஜனாதிபதியின்

www.tamilarangam.net

OECD (Organisation for Economic Corperation and Development) அமைப்பின் தொழில்வழங்கு ஒழுங்கின்கீழ் வருபவர்கள்

அல்லது

இந்நாட்டில் சுயமாக நிரந்தர தொழில் ஸ்தாபனத்தைத் தொடங்கவும் நடத்தவும் இருப்பவர். (ஸ்தாபனத்தைத் தொடங்குவதற்கான பொருளாதார அடிப்படை நிரூபிக்கப்பட வேண்டும்)

அல்லது

பேராசிரியர் அல்லது அதுபோன்ற விஞ்ஞான உயர்பதவி வகிப்பவர்.

இவ்வகைகளில் கொடுக்கப்படும் அனுமதிகள் புதுப்பிக்கப் படலாம். அத்தோடு இவ்வகைகளில் கொடுக்கப்படும் அனுமதிகள் நிரந்தர அனுமதிபெற வழிகோலும். இச்சந்தர்ப்பத்தில் இவ்வகையில் கொடுக்கப்படும் அனுமதிகள் கட்டுப்படுத்தப்படாத அனுமதிகள் எனக் கருதப்படும்.

இவ்வகைகளில் முதலாவது வகையைச் சேர்ந்தவர்கள் தொழில் செய்வதற்கான அனுமதியோ அல்லது இருப்பிட அனுமதியோ பெறத் தகுதிவாய்ந்தவர்கள். ஏனைய வகையைச் சேர்ந்தவர்கள் தொழில்செய்வதற்கான அனுமதியைப் பெற தகுதிவாய்ந்தவர்கள்.

* நிரந்தர வதிவிட அனுமதி பெறுவதற்கு வழிகோலமுடியாத அனுமதிகள்

பிரிவு 1: வதிவிட அனுமதிக்கான நிபந்தனைகள்:-

முழுநேரம் கல்விகற்கும் மாணவர்கள் (படிப்பு முடிந்ததும் தமது தாய்நாட்டுக்குத் திரும்பிப் போகவேண்டும் என்பதும் ஒரு நிபந்தனையாகும்)

அல்லது

பத்திரிகையாளர், வெளிநாட்டு வானொலிக்காகப் பணியாற்றி வருவோர், புலமைப் பரிசில் பெற்றுவரும் ஆராச்சியாளர்கள்.

அல்லது

இருப்பிடகாலம் ஒருவருடத்துக்கு மேற்படாத பட்சத்தில் நோர்வேக்கும் ஏனைய அரசாங்கத்துக்கும் இடையே செய்யப்பட்ட கலாசார ஒப்பந்தத்தின்கீழ் NAVF இனால் வழங்கப்படும் மாணவர்கள் ஆராச்சியாளர்கள் அல்லது கலாசார அலுவலகர்கள்.

அல்லது

விளையாட்டுக் கிளையொன்றைத் தொடங்கவோ அல்லது அதன் வளர்ச்சிக்கோ அவசியமான விளையாட்டுவீரர்கள்.

பிரிவு 2: தொழில் செய்வதற்கான அனுமதிகள்:-

ஆராய்ச்சியாளர் அல்லது புலமைப்பரிசில் பெறும் ஆராய்ச்சியாளர் அல்லது விரிவுரையாளர்

அல்லது

பணிப்பெண்

அல்லது

பயிற்சியாளர்

அல்லது

சமயநிறுவனம் ஒன்றுக்காக சமயத்தைப் போதிப்பவர்.

இவ்வகையான அனுமதிகள் புதுப்பிக்கப்படலாம்.

மாணவர்களைப் பொறுத்தமட்டில் படிப்பில் திருப்தியான முன்னேற்றம் இருக்கவேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகும். பாடநெறியை மாற்ற அனுமதிக்கப்பட மாட்டாது.

பகுதிநேர வேலை அனுமதியைப் பொறுத்தமட்டில் முன்பு கணவன், மனைவி இருவரும் சேர்ந்து கிழமைக்கு 20மணிநேரம் மட்டும் வேலைசெய்ய அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் புதிய

(தொடர்ச்சி 3 ஆம்,

www.tamilarangam.net

இங்கு தொடர்ச்சியாக 3வருடங்கள் நோர்வேயில் வசித்தவர் என்பது இம்மூன்றுவருட காலப் பகுதியில் மொத்தமாக 7மாதங்களுக்குமேல் நோர்வேக்கு வெளியே வசித்திராதவர் எனப் பொருள்படுகிறது.

கட்டுப்பாடற்ற அனுமதிகள் என்பது புதுப்பிக்கப்பட முடியாதவை அல்லது நிரந்தர வதிவிட அனுமதிக்கு வழிவகுக்க முடியாதவை என கட்டுப்படுத்தப் பட்டிராத அனுமதிகள்.

இம்மூன்றுவருட காலவரையறை கட்டுப்பாடற்ற இருப்பிட அனுமதி அல்லது கட்டுப்பாடற்ற தொழில் செய்வதற்கான அனுமதி தீர்மானிக்கப்பட்ட திகதியில் இருந்து கணிக்கப்படும்.

குடும்ப மீளிணைவின் அடிப்படையில் நோர்வேக்கு வந்தவர்களைப் பொறுத்தமட்டில் நோர்வேயை வந்தடைந்த நாளிலிருந்து கணிக்கப்படும். மறியல்தண்டனை தீர்க்கப்பட்டவரைப் பொறுத்தமட்டில் குற்றம் சுமத்தப்பட்ட நாளிலிருந்து மறியல்தண்டனை அனுபவிக்கும் வரையுள்ள காலம் காலவரையறைக்குள் சேர்த்துக்கொள்ளப் படமாட்டாது.

நிரந்தர வதிவிட அனுமதிபெற்ற பெற்றோர்க்கு நோர்வேயில் குழந்தை பிறந்து ஒருவருடத்துக்குள் விண்ணப்பிக்கும் காலத்தில் நோர்வேயில் வசித்த காலத்தை கருத்திற் கொள்ளாமலேயே குழந்தைக்கு நிரந்தர வதிவிட அனுமதி பெறலாம்.

இதுபோல் சுவீகாரம் செய்த குழந்தைகளுக்கும் குழந்தை நோர்வேக்குள் வந்து ஒருவருடத்துக்குள் விண்ணப்பித்தால் பிள்ளைக்கு நிரந்தர வதிவிட அனுமதி கிடைக்கும்.

<u>நிரந்தர வதிவிட அனுமதி பெறக்கூடிய வேறுவகையினர்:-</u>

மேற்குறிப்பிட்ட வகைக்கு அடங்காதவர்கள் குறைந்தது ஒருவருடமாவது நிரந்தர வதிவிட அனுமதிபெற வழிவகுக்கக்கூடிய அனுமதியைப் பெற்றிருந்தும்

அ) நிரந்தர வதிவிட அனுமதிபெற வழிவகுக்காத அனுமதியோடு நீண்டகாலம் நோர்வேயில் வசித்திருந்தோ

அல்லது

ஆ) வேறு விசேட நியாயப்படியான காரணங்களில் இருந்தோ காணப்படும் பட்சத்தில்

நிரந்தரவதிவிட அனுமதி வழங்கப்படலாம்.

<u>நிரந்தர வதிவிட அனுமதியின் உள்ளடக்கம்:-</u>

இவ்வனுமதி நோர்வேயில் எப்பகுதியிலும் காலவரையறையின்றி வசிப்பதற்கும் தொழில் செய்வதற்கு பொது அனுமதி, சுயதொழில் ஸ்தாபனம் நடாத்த உரிமையைக் கொடுக்கிறது. அத்தோடு இவ்வனுமதி குற்றச்செயலில் ஈடுபடுபவரை அல்லது நோர்வேயின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிப்பவரை நோர்வேயேவிட்டு வெளியேற்றுவதில் இருந்து பலமான பாதுகாப்பை அளிக்கிறது. இவ்வனுமதி நோர்வே நாட்டுக்குள் பலதடவைகள் நுழைவதற்கான (multiple reentry) அனுமதியைக் கொடுக்கும்.

<u>நிரந்தர வதிவிட அனுமதியை இழத்தல்:-</u>

ஒருவர் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்குமேல் நோர்வேக்கு வெளியில் வசித்தாராயின் நிரந்தர வதிவிட அனுமதியை இழப்பார். நோர்வேயில் ஒருமுறையோ பலமுறையோ குறுகியகாலம் இடையில் வந்து தங்கிவிட்டு நோர்வேக்கு வெளியில் வசித்தாலும்கூட அவர் தொடர்ச்சியாக நோர்வேக்கு வெளியில் வசித்தவராகக் கருதப்படுவார். நோர்வேக்கு வெளியில் இருந்தகாலம் நோர்வேக்கு

www.tamilarangam.net

1. தொழில் விரைவில் தொடங்குவதற்கான தேவையை தொழில் வழங்குபவர் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

2. விண்ணப்பம் அங்கீகரிக்கப் படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருத்தல்.

3. சாதாரணமாக விண்ணப்பிக்கும் நடைமுறையை விண்ணப்பதாரி பின்பற்றியிருந்தும், விண்ணப்பம் UDIஐ வந்தடைந்துமிருத்தல்.

இவ்வனுமதி தற்காலிகமாக இருக்கும். அத்தோடு இவ்வனுமதிக்கும் விண்ணப்பத்தை முடிவுசெய்வதற்கும் எதுவித சம்பந்தமும் இருக்காது.

<u>அனுமதி புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் முடிவுசெய்யும் வரையுள்ள காலத்தில் அதே நிபந்தனையின்கீழ் தொழில் செய்வதற்கோ அல்லது வசிப்பதற்கோ அனுமதி:-</u>

தொழில் செய்வதற்கான அனுமதியையோ அல்லது இருப்பிட அனுமதியையோ புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்தவர் முன்னைய அனுமதிக்காலம் முடிவதற்கு ஒருமாதத்துக்கு முன்னதாகவே விண்ணப்பித்திருந்தால் விண்ணப்ப முடிவுசெய்யும்வரை அதேநிபந்தனையின்கீ தொடர்ந்தும் வசிக்கலாம்.

முன்னைய அனுமதிகாலம் முடிவதற் முன்னுள்ள ஒருமாதத்துக்கு பி விண்ணப்பித்திருந்தால் அவ்விண்ணப்பத் ஏற்று அனுமதி கொடுப்பதற்கா சாத்தியக்கூறுகளையும் முன்பிருந் அனுமதி நிரந்தர வதிவிட அனுமதிக் வழிவகுக்கக்கூடியதாக இருந்தத என்பதையும் கருத்திற் கொண் விண்ணப்பம் முடிவுசெய்யும்வரை வசிக்கலாமா என மதிப்பிடுவார்கள்.

<u>* நிரந்தர வதிவிட அனுமதி</u>

கடைசி 3வருடங்களும் நோர்வேயில் <u>கட்டுப்பாடற்ற</u> இருப்பிட அனுமதியோடு அல்லது <u>கட்டுப்பாடற்ற</u> தொழில் செய்வதற்கான அனுமதியோடு <u>தொடர்ச்சியாக</u> வசித்தவர்கள், கடுமையான சட்டமீறல், குற்றச்செயல் நடவடிக்கைகளால் நாட்டைவிட்டு வெளியேற்றப்படும் வகைக்குள் அடங்காவிடில் நிரந்தர வதிவிட அனுமதிக்கு விண்ணப்பித்தால் அவ்வனுமதி பெறும் உரிமை அவர்க்குண்டு.

---

## அலை ஓசை

Alai O0AI
109, Philip Lane,
Tottenham,
LONDON, N15 4JR
UK

## ஏலையா

K.Sivarajasooriyar,
Theresenter 30,
4200, Oberhaugen,
WEST GERMANY

## தளிர்

Thalir
H.M.Schleyer Str 15
7032 Sindelfngen
WEST GERMANY

## மனிதம்

மனிதம் (இருமாத இதழ்)
'Manitham'
Post fach 12
3000, BERN 11

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சட்டத்தின்படி இருவரும் தனித்தனியாக கிழமைக்கு 20மணிநேரம் வேலைசெய்ய அனுமதி பெறலாம்.

பகுதி1இல் குறிப்பிட்ட கடைசி மூன்று வகையினர்க்கும் பகுதி2இல் குறிப்பிட்ட வகையினர்க்கும் அனுமதியின் காலஎல்லை எல்லாமாக 2வருடங்களைவிட அதிகமாக இருக்கமுடியாது.

இங்கு குறிப்பிட்ட வகைகளின்கீழ் கொடுக்கப்படும் அனுமதிகள் நிரந்தர அனுமதியைப் பெற வழிவகுக்காது.

* புதுப்பிக்க முடியாத அனுமதிகள்

ஒருவருடம் தொழில் செய்வதற்கான அனுமதிபெறத் தகுதியானவர்கள்:-

நோர்வேயில் கல்வியை முடித்தவர்கள் தமது தாய்நாட்டில் தொழில் செய்வதற்கு இத்தொழில் மிகவும் பிரயோசனமானது என அத்தாட்சிப்படுத்தினால்

அல்லது

சங்கீதமேதை, கலைஞன், ஓவியன் அல்லது இவர்களோடு வரும் உதவியாளர்.

இவ்வனுமதிகள் புதுப்பிக்கப்பட முடியாதவை. அத்தோடு நிரந்தர வதிவிட அனுமதியைப் பெற வழிவகுக்காது.

* முதன்முறையாக தொழில் செய்வதற்கான அல்லது இருப்பிட அனுமதிக்கு விண்ணப்பித்தல்–

முதன்முறை தொழில் செய்வதற்கான அல்லது இருப்பிட அனுமதிக்கு விண்ணப்பிப்பவர்கள் தமது வாழ்க்கைச் செலவுக்கு தேவையான பணத்துக்கு உத்தரவாதமளிக்க வேண்டும். தொழில் செய்ய விருப்பமானவர்களாயின் முழுநேர வேலையில் கிடைக்கும் வருமானம் போதுமானதாகும். மாணவர்களாயின் படிக்கும் காலத்தில் கடன் கிடைக்குமாயின் அல்லது வங்கியில் இருப்புசெய்யப்பட்ட சொந்தப் பணத்தையோ பகுதிநேர வேலையில் கிடைக்கும் வருமானத்தையோ காட்டலாம்.

இங்கு குறிப்பிட்ட வருமானங்களின் சேர்க்கையையும் காட்டலாம்.

மூன்றாமவர் பொருளாதார உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் இந்த நிபந்தனைகளில் இருந்து விலக்கு அளிக்கப்படலாம்.

தொழில் தொடங்குவதற்கான தற்காலிக அனுமதி:-

பின்வரும் நிபந்தனைகளின்கீழ் முதல்தடவை தொழில் செய்வதற்கான அனுமதிக்கு விண்ணப்பிப்பவர்க்கு விண்ணப்பம் பரிசீலனை செய்து முடியும்வரை தொழில்செய்ய தற்காலிக அனுமதி வழங்கலாம்.



*"அவர் சாப்பாட்டுக்கு வழியில்லையெண்டு வாழைக்குலை களவெடுத்து பலதடவை 'இயக்கத்'தால் எச்சரிக்கப் பட்டவர்... இன்று திடீரென்று எப்படிப் பணக்காரரானார்?"*

*"இயக்கத்திலை சேர்ந்து முக்கிய சாமான்களைப் பதுக்கி 'டபுள்' விலைக்கு வித்து பெரிய பணக்காரராகி விட்டார்"*

*– ஈழத்தோன் –*

www.tamilarangam.net




இச் சட்டம் 1991ஆம் ஆண்டு தைமாதம் முதலாந் திகதியில் இருந்து அமுலுக்கு வந்துள்ளது. இதேவேளை 1956 ஆடி 27இலிருந்து நடைமுறையில் இருந்த "இந்நாட்டுக்குள் வெளிநாட்டவரின் அனுமதி" பற்றிய சட்டத்தின் கீழிருந்த சட்டப் பிரமாணங்களும், தீர்மானங்களும் காலாவதியாகின்றன.

முதலாந்திகதி தைமாதம் 1991இற்கு முன் வழங்கப்பட்ட அனுமதிகளும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பாஸ்போட்டுகளும் அவற்றில் குறிப்பிட்ட கால அவகாசம்வரை தொடர்ந்தும் செல்லுபடியாகும். புதியசட்டம் அமுலுக்கு வந்த நேரத்தில் வரையறையற்ற காலத்துக்கு இருப்பிட அனுமதிபெற்று ஒருவருடமோ அல்லது அதற்கு மேலோ கடந்திருந்தால் அவர்கள் நிரந்தர அனுமதி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். புதியசட்டம் அமுலுக்கு வந்த தருணத்தில் முடிவுசெய்யப்படாத விண்ணப்பங்களும் மேன்முறையீடுகளும் புதிய குடிவரவுச் சட்டத்தின்கீழக் கையாளப்படும்.

* நிரந்தர அனுமதி பெறுவதற்கு வழிகோலக்கூடிய அனுமதிகள்.

பின்வரும் நிபந்தனைகளில் ஒருவகைக்குள் அடங்குபவர்கள் இவ்வனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி பிறந்த சமயத்தில் அவரது பெற்றோரில் ஒருவராவது நோர்வேநாட்டுப் பிரஜாவுரிமையைக் கொண்டிருந்தால்

அல்லது

ஒரு தொழிலில் திறமைவாய்ந்தவர்

அல்லது

தொழில்ரீதியான கல்விகற்றவர்

அல்லது

விஷேட தராதரத்தைக் கொண்டிருப்பவர்.

(தொழில் செய்யும் ஸ்தாபனத்துக்கு அத்தொழில் அத்தியாவசியமாகவும், அப்பதவியை நிரப்பக்கூடிய உள்நாட்டவர் எவருமில்லை என்பதும் நிபந்தனையாகும். தமது கல்வியில் முழு அல்லது பெரும்பாலான பகுதியை நோர்வேயில் பெற்றவர்கட்கு நோர்வேக்கு வெளியே 5வருடங்கள் வசித்தபின் முதல்தடவையாக அனுமதி கொடுக்கலாம்)

www.tamilarangam.net

மக்கள் வெளியேறியமைக்கு அரசின் குண்டுவீச்சு, உணவின்மை என்பன பிரதான காரணிகளாக அமைகின்றன. இவ்வாறு தப்பி சிங்களப் பிரதேசங்களுக்கு பாதுகாப்புத் தேடிவரும் தமிழர்கள், குறிப்பாக கொழும்புக்கு ஓடிவரும் தமிழர்கள் பெரும்பாலும் வசதிபடைத்தவர்களே. பெரியளவில் தமிழர்கள் வந்துவிட்டதால் தற்போது கொழும்பில் வீட்டுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. (83ஆம் ஆண்டு நிலமைமாறி புதிய நிலமை தோன்றியுள்ளது) இதனால் ஒரு சிறியவீட்டின் வாடகையே பலஆயிரங்களாக உயர்ந்துவிட்டது. அதைவிட முற்பணம் (அட்வான்ஸ்) 20/30ஆயிரங்களாக உயர்ந்துகொண்டே போகிறது. இதைவிட வேறுபல எடுபிடிகளையும் தாங்கிக் கொள்ள வேண்டும். (அதைவிட தமிழர்கள் என்றால் வேறுபல எடுபிடி கண்டிஷன்களாம்) வீடு கிடையாத பணக்காரர்களும், வெளிநாட்டு பணவருவாய் உள்ளோரும் சில சின்ன லொட்ஜ், ஹோட்டல்களில் அறையை எடுத்துக்கொண்டு காலத்தை ஓட்டுகின்றார்கள். ஆனால் பாவம் பெரும்பாலான, வசதியற்ற தமிழர்களது நிலமைதான் பரிதாபகரமாக உள்ளது. வீடுவாசலின்றி, எம்பிமார்களின் வீடுகளிலும் தெருக்களிலும் பாடசாலைகளிலும் கோயில்களிலும் ப்ளாற்பாரங்களிலும் தமது வாழ்க்கையை ஓட்டும் ஏழைகளது நலமையை எண்ணுகையில் மிகவும் வேதனையாக உள்ளது. தினக்கூலி செய்யும் ஏழைகளின் வருவாய் அற்றுப்போனதால் தாம் அன்றுஉண்ட ஒருவேளை சோற்றைக்கூட உண்ணமுடியாத நிலையில் வெறும் வயிற்றுடன் போராடும் இந்த அப்பாவி வறியமக்களின் நிலை என்ன? சிங்களப் பேரினவாத அரசோ ஏதோ புலிகள்தான் பிரச்சனை நீங்கள் இங்கே ஓடிவந்துவிடுங்கள் என்று கர்ச்சிக்கின்றது. ஆனால் இவ்வாறு இடம்பெயர்ந்துவந்த மக்களை அரசு கவனிக்கும் லட்சணத்தைப் பார்தால் தெரியும்! மக்கள்மீது அக்கறையில்லாத அரசை மக்கள் எப்போதுதான் நம்பினார்கள்? ஏங்கித் தவிக்கும் மக்களுக்கு வழிதான் என்ன?

– சகாதேவன் –



"அரசே! எமது நாட்டின்மீது படையெடுத்துவரும் எதிரிநாட்டு அரசன் எம்மிலும் பத்துமடங்கு படைபலங் கொண்டவன். எங்களால் சிறிதுநேரங்கூடத் தாக்குப் பிடிப்பது கஷ்டம்...!"

"கவலையை விடும். அமெரிக்காவுக்கு நாம் தப்பியோடி அங்கிருந்து முடிந்தால் 'ஜனநாயக முறைப்படி' தேர்தலில் நின்றுகாட்டுமாறு எதிரிநாட்டு அரசனுக்குச் சவால் விடலாம்!"

– ஈழத்தோன் –

www.tamilarangam.net

அவசியம் என்பது ஏற்றுக்கொள்வோருக்கு மாத்திரைக் குறிகளும் கவனமாக பாவிக்கப்பட வேண்டிய தேவையை விளக்க அவசியமில்லை.

நூலை அறிமுகஞ் செய்த செல்வம் அவர்கள் சேரன்பற்றி கூறும் வார்த்தைகள் எனக்கு உடன்பாடானவையே ஆயினும் "கவிதையில் அரசியல் பிரக்ஞை என்பது ஈழத்துக் கவிஞர்களால்தான் வளம்பெற்றது" என்ற வசனம்பற்றி ஐயம் உண்டு. சின்னச்சாமி ஐயர் மகன் சுப்பிரமணிய ஐயர் என்று ஒருவர் எழுபதுசொச்ச வருஷம் முன்னால் அற்புதமான அரசியற் கவிதைகளை எழுதியிருக்கிறார். (அவரைப் பாரதி என்று சிலபேர் அழைப்பதாகக் கேள்வி!)

மொத்தத்தில் நல்லதொரு காரமான கவிதைத் தொகுதியை வழங்கிய தேடலுக்கு நன்றி●

எலும்புக்கூடுகளின் ஊர்வலம், கவிதைகள், சேரன், தேடல் பதிப்பகம், ரொரான்ரோ, கனடா, 1990 வைகாசி, 22ப.

# கொழும்பில் வீடு வேண்டும்!

தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை எதிர்த்து அதிகமானவர்கள் அன்றுமுதல் போராடிவந்துள்ளனர். ஆனால் சிலர் புறமுதுகிட்டு தமது நலன்களை முதன்மையாகக் கருதி ஓடினர். குறிப்பாகத் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்ட போதும், அதையடுத்து அடுத்தடுத்து ஏற்பட்ட இனக்கலவரங்களாலும், இராணுவ ஒடுக்குமுறைகளாலும் இந்த நிலைமை ஏற்பட்டது. இரண்டாமவர்கள் இராணுவ அபாயத்தால் தப்பிச்சென்றனர் என்பதிலே ஓரளவு நியாயம் இருந்தது. இதையடுத்து தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்ற நிலமையை இயக்கங்கள் உருவாக்கியதால் மக்கள் திக்குமுக்காடினர். இயக்க உள்வதை, இயக்கங்களால் மக்கள்வதை, இயக்கமோதல்கள் என்பவற்றால் மக்களின் உறுதி தளர்ந்துபோயிற்று. இயக்கங்களால் மக்களின் போராட்டம் சரியானமுறையில் வடிவமைக்கப் படாமையாலும், மக்களின் சரியான பங்களிப்பை சரியானமுறையில் வெளிப்படுத்த முட்டுக்கட்டையாக இயக்கங்கள் உருவெடுத்தமையாலும், சிங்கள ஒடுக்குமுறையாளர்களால் மறுக்கப்பட்ட ஜனநாயக மனிதவுரிமைகளை பெற்றுத்தருவதாக காட்டிக்கொண்ட இயக்கங்கள் அரசின் நலையையே பின்பற்றியமையாலும் மக்கள் திகைத்துப் போயினர். இதைத் தொடர்ந்து நம்பிக்கையீனம் காரணமாகவும், கொடிய சிங்களஅரச இராணுவத்தின் ஒடுக்குமுறைகளாலும் பெரியளவில் சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது மக்கள் தமது வாழ்விடங்களைவிட்டு வெளியேறுகின்றனர். இது இன்றைய யதார்த்தமானாலும் துரதிர்ஷ்டமான நிலமைதான். அரசின் தீயநோக்குகளுக்கு இவை சாதகமாகவே உள்ளது. கடந்த வருடம் யூன்மாதம் ஆரம்பித்த மோதல்களால் மக்கள் சந்தர்ப்பங்கிடைத்த போதெல்லாம் கணிசமான அளவில் வெளியேறிவிட்டனர். குறிப்பாக வடக்கிலிருந்து பெரியளவில்

www.tamilarangam.net

ஊர்வலமாகச் செல்லும்
எலும்புக்கூடுகளில் சில குழந்தையை
ஏந்திச் செல்கின்றன. குழந்தை மட்டும்
ஏன் எலும்புக்கூடாக இல்லை?
கவிதையின் இறுதிப் பகுதியில்
ரொறன்ரோ உறைபனித் திரளுள்
துண்டுதுண்டாக வீசப்பட்டிருந்தது எது?
அவனா, எலும்புக்கூடுகளா?
பயங்கரத்தை ஒரு கவிச்சித்திரமாக
வரைந்துவிட்டு அதனுள் பயங்கரம் என்ற
சொல்லைப் புகுத்தும்போது கவிஞரின்
சொல்லாற்றல்மீது அவருக்கே நம்பிக்கை
இல்லாமற் போகிறதோ என்ற ஐயம்
மனதில் எழுகிறது. இவையெல்லாம்
ஒருபுறம் இருக்க கவிதையை வாசித்து
வெகுநேரத்தின் பின்பும் நமது காதில்
எலும்புக்கூடுகளின் படைநடப்பின் ஒலி
கேட்கிறதே, அங்குதான் சேரனின்
கவியாற்றல் ஓங்கி ஒலிக்கிறது.
'புதைகுழிப் பாடலில்' வரும்
'வார்த்தைக்குள் அகப்படாத குரூரம்' என்ற
சொற் தொடரும் முன்குறிப்பிட்ட பயங்கரம்
என்ற சொல்போன்று கவிதையை
பலவீனப்படுத்துவதாகும். தன்னுடைய
புதைகுழியையே வெட்டியவன் சொன்ன
இறுதிவார்த்தைகளில் தேசத்தின் உயிர்
இருந்ததாயின் அவன் சொன்னது என்ன?
நம்மால் நமது மனநிலைக்கேற்ப
ஊகிக்கத்தான் முடிகிறது. இதுவே
கவிஞரின் நோக்கம் என்று நினைக்கிறோம்.
இக்கவிதையுடன் ஒப்பிடும்போது 'பிசாசுக்
கவிதை' (சேரனது நகைச்சுவைக்கு
நன்றி!) வெகு சராசரியாகவே தெரிகிறது.
'நவீன துப்பாக்கி அரசன்' குழந்தைப்
படைகளின் ஒரு சித்தரிப்பு.

"இருபுறமும் குழல்நீண்ட
துப்பாக்கிச் சனியனை
ஏந்துகிறேன்"

என்ற ஈற்றடிகள் கட்டாயமாய்ப்
படைக்குள் இழுக்கப்பட்ட சிறுவர்களின்
நிர்க்கதியான நிலையை தத்ரூபமாகச்
சித்தரிக்கின்றன.
'சிம்மாசனமும் சவப்பெட்டியும்' போன்ற
கொம்பஸிட் கவிதைகள் எப்போதோ
வந்துபோனவை. சிம்மாசனத்தில் இருந்து
தேசத்தின் சவப்பெட்டிமீது வடிகிற ரத்தம்
யாருடையது? இதில் புதிர்போடுகிற
மேதாவித்தனம் உள்ள அளவுக்குக்
கவித்துவம் தென்படவில்லை.
'கேள்விகள்' ஏனோ விகடத்
துணுக்குகளின் (ஹா ஹா) திரட்டாகவே
தெரிகிறது. இது பரீட்சார்த்தமான
முயற்சிகளில் ஒன்றோ தெரியாது.
எக்காரணத்தாலோ என்மனதில் பாரிய
பாதிப்பை ஏற்படுத்தத் தவறிவிட்டது.
சேரன் அல்லது அச்சுப்பதிப்பவர்
கவனிக்க வேண்டிய ஒரு சிறு விஷயம்:
உயிர்பிடுங்கிகளின் காலத்தில்

இருட்டு; மிருகங்கட்கு
ஒளி; மனிதர்கட்கு
அது முன்பு

என்ற வரிகளின் நடுவே மாத்திரைக்
குறிகள் (;) என இருப்பது தவறு. அவை
(:)ஆக இருந்திருக்கலாம். குறிகள்
இல்லாமலே இருந்திருக்கலாம் அல்லது
(;)வரிகளின் ஈற்றில் வரலாம். உள்ளபடி
அவை

மிருகங்கட்கு ஒளி
மனிதர்கட்கு அது முன்பு

எனவே அர்த்தப்படும். கவிதையிற்
சொற்பிரயோகம் இறுக்கமாக இருப்பது

_பனிமலர்_
_புதிய இருமாத இதழ். வெளியீடு_
_தமிழ்மக்கள் புதிய கலாசாரக் குழு,_
**BCM POLARIS, LONDON WC1N 3XX.**

www.tamilarangam.net

'ராஜனி' தொகுதியின் முதற் கவிதை. இதுவே தொகுதியில் உள்ளவற்றில் மிக இறுக்கமானதும் போராட்ட உணர்வினைச் சற்றேனும் வெளிக்காட்டுவதும் எனலாம்.

"நீ விழுந்தபோது
சூரியனின் கடைசிக் கிரணங்கள்
சுவரில் விழுத்திய
உன் நிழல்
கைகளை வீசி மேலே ஓங்கிற்று

முடிவிலி வரை"

ராஜனி திரணகமவின் கொலையைக் கண்டித்தும் அவருக்கு அஞ்சலி செலுத்தியும் பல கவிதைகள் வந்துள்ளன. நான் படித்தவற்றுள் சேரனது அஞ்சலியை விடச் சிறப்பானது இல்லை. மேற்காணும் அதன் இறுதிவரிகள் ராஜனியின் போராட்ட உணர்வின் அற்புதமான படிமமாக அமைகின்றன.

'உயிர் பிடுங்கிகளின் காலம்' கோபமும் ஏளனமும் கலந்த ஒரு படைப்பு.

"போ அப்பால்
தலையிழந்த சூரியனே
முகமற்ற நிலவே
ஒளி செத்த தேசமே
உயிர் தின்ற காலமே"

போன்ற படிம அடுக்குகளும்

"அவர்க்கோ
இரவல் நாட்டில் அந்நிய வாழ்வு
எனக்கோ
சொந்த நாட்டில் இரவல் இருப்பு"

என்ற வெறுப்புணர்வின் வெடிப்பும் முன்பு சேரன் எழுதிய வரிகள் சிலவற்றை நினைவூட்டுகின்றன. இக் கவிதையில் மேற்கூறிய படிமங்களும் இரவல் என்ற சொற்பிரயோகமும் கவிதையின் தொடக்கப் பகுதி தரும் எதிர்பார்ப்பை நிறைவுசெய்யுமாறு கவிதைக்கு வலிமையூட்டுவதாகத் தெரியவில்லை.

'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்' என்ற சிறப்பான கவிதை ஏனோ இரண்டு கவிதைகளை ஒட்டவைத்த மாதிரி உணர்வை ஏற்படுத்துகின்றது. ஒற்றைப் பரிமாண வாழ்வின் சாதாரணமான கனவுகளைக் கண்ட ஒருவனது கனவுகளின் தன்மையில் ஏற்பட்ட மாற்றம் பற்றிய கவிதை அது. கனவின் உருமாற்றத்துக்கான சூழ்நிலையைச் சேரன் கூறமுற்படவில்லை. அச் சூழ்நிலை நாமறிந்தது. அதை அவர் கூறாமல் விட்டதே கவிதைக்கு இறுக்கத்தைத் தருகிறது. ஆயினும் சேரனது நகைச்சுவையை வெளிக்காட்ட முனையும் வரிகள் கவிதைக்கு வலுவூட்டுகின்றனவா எனத் தெரியவில்லை.

"மருத்துவம், பொறியியல், கலைக்கியல்
மும்மூர்த்திகள்
இப்போது புதிதாய்க் 'கொம்பியூட்டர்'
படிப்பும்
மும்மூர்த்திகளுடன் துர்க்கா தேவியின்
புதிய எழுச்சி"

கொம்பியூட்டர்க் கல்வி ஏன் துர்க்காதேவியாகத் தெரிகிறதோ தெரியவில்லை. (இதற்குள் அர்த்தம் தேடிக் கண்டுபிடிக்க ஒருவேளை எனக்கு ரஸனை போதாதோ!)

கவிதையின் பிற்பகுதி surrealism எனப்படுகிற அதியதார்த்தக் கலைவடிவப் போக்கைச் சார்ந்தது. இக் கலைவடிவம் மேலைநாடுகளில் பலதுறைகளில் பரவியுள்ளது. தமிழில் அசோக மித்திரனின் 'ஆகாயத் தாமரை' நாவல் இத்தகைய தன்மையுடையது என நினைவு. சமகால வடபிரதேசச் சூழலின் குரூரத்தை இந்தமுறையான எழுத்தாற் சித்தரிக்க முடிவது போல வழமையான வர்ணனைகளாற் செய்யமுடியாது. சேரனது எலும்புக்கூட்டு ஊர்வலம் அற்புதமான ஒரு படிமமுறை என்றே சொல்வேன். எனினும் ஒருசில தெளிவீனங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. இவை வேண்டுமென்றே புகுத்தப்பட்டவையோ என நிச்சயமில்லை.

www.tamilarangam.net

பிய்த்து வரிவரியாக அடுக்குகிற காரியமாகவே தெரிகிறது. இது மட்டரகமான மலிவுக் கவிதைகளின் நிலை. இன்னுஞ் சிலரிடம் படிமங்களையோ அல்லது மிகவும் சிக்கலாகத் தெரிகின்ற சிந்தனைகளையோ மட்டுமோ கவிதையின் சாராம்ஸமாகக் கருதும் போக்கு உள்ளது. இது தமிழகத்தில் பரவலாக காணப்படக் கூடியது எனினும் ஈழத்துக் கவிதையிலும் இதன் பாதிப்பு உண்டு. கவிதையின் கூறுகளையே கவிதையாகக் காணும் போக்கே புதுக்கவிதையின் முக்கியமான பலவீனம் என்று தோன்றுகிறது. புதுக்கவிதை மூலம் ஒரு முழுமையான அனுபவத்தைப் பகிரவும் பரிமாறவும் முனைவோர் சிறுபான்மையினரே. சேரன் இவர்களுள் ஒருவர். அவருடைய கவிதைகளின் நடையில் புதிய போக்குகள் உள்ளன. ஆயினும், அவரது கவிதைகளின் வலிமை அவற்றின் எளிமையிலும் உணர்வுபூர்வமான உள்ளடக்கத்திலுமே தங்கியுள்ளது.

இக் கவிதைத் தொகுதியிலுள்ள எட்டுக் கவிதைகளில் 'யமனும்' 'இரண்டாவது சூரியோதயமும்' காட்டிய சேரனைச் சில கவிதைகளில் தெளிவாகவே தெரிகிறது. சில கவிதைகளில் அவரது புதுமை வேட்கையின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது ஆயினும் ராஜனிபற்றிய அவரது கவிதையின் சோகத்தினூடு எழும் பிரகடனத்தை விட்டால் நம்பிக்கையீனமும் விரக்தியுமே எல்லாக் கவிதைகளிலும் இழையோடுகிறது. அவரது கவிதைகளில் உள்ள நகைச்சுவை (சில இடங்களில் வலிந்து திணிக்கப்பட்டது போன்று உள்ளது) **black humor** எனப்படும் துன்பியல் நகைச்சுவையின் தன்மையுடையது. அவருடைய கவிதைகளில் உள்ள அரசியல் விமர்சனம் சூழலின் அவலத்தை பிரதிபலிக்கிறதே ஒழிய, அதற்கப்பால் செல்லுமாறு தூண்டும் முனைப்பைக் காட்டவில்லை. இது அவரது கவிதைகள் எழுதப்பட்ட காலத்தினதும் சூழலினதும் விளைவான ஒரு மனநிலையின் பிரதிபலிப்பாக இருக்கலாம். ஆயினும் இன்றைய சூழலின் தேவை இதற்கும் மேலானது. அதற்கான தேடலில் கவிதைக்கும் ஒரு பங்குண்டு. கொடிய குளிரில் நடுங்கி ஒதுங்கிச் சுருண்டுபோகும் உடல்களிலும் மனங்களிலும் சூடேற்றவும், மங்கித் தெரியும் மனிதவுரிமைப் போராட்டத் தீக்கு புத்துயிர்ப்பூட்டவும் ஒரு தேவை இருக்கிறது. இதற்கான ஒரு அரசியற் பார்வை சேரனது எதிர்காலக் கவிதைகளில் விருத்தியடைய வேண்டும் என்பது என எதிர்பார்ப்பு. இந்தப் பொதுவான மதிப்பீட்டை அடுத்துக் கவிதைகள் பற்றிய சில விமர்சனக் குறிப்புகளை எழுத விரும்புகிறேன்.

*ஈழத்துக்கவி சேரனின் அரசியற் கவிதைகள் கொண்ட 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்' கவிதைத் தொகுதி கனடாவில் வெளியாகியுள்ளது. 'தேடல் பதிப்பகம்' வடிவமைக்க, கலை இலக்கிய மன்றம் இத்தொகுப்பில் உள்ள சில கவிதைகள் 'தாயகம்' வாரஇதழிலும் சுவடுகளிலும் முன்னர் வெளிவந்தவை. சேரனின் நாலாவது கவிதைத் தொகுதியான 'எலும்புக் கூடுகளின் ஊர்வலம்' அவரது மூன்றாவது அரசியற் கவிதைத் தொகுதியாகும்.*

*தொடர்புகள்:-* 'Thedal Pathippakam', 566 Parliament St., Toronto, Ont., Canada.

www.tamilarangam.net

பேராசிரியர் சி.சிவசேகரம்

# 'எலும்புக்கூடுகளின் ஊர்வலம்' கவிதைத் தொகுதி - ஒரு விமர்சனம்

சமகால ஈழத் தமிழ்க் கவிதைகளின் வளர்ச்சிக்கு சேரனின் பங்களிப்பு முக்கியமானது என்பதை விடத் தமிழ்க் கவிதையின் புதிய சகாப்தத்தின் முக்கியமான ஒரு கவிஞன் சேரன் என்பது கூடப்பொருந்தும். அவரது கவிதைத் தொகுதிகளான இரண்டாவது சூரியோதயத்தையும் யமனையும் கவிதைபற்றி அறிவோர் அறிவர். அவரது கவிதைகள் ஒன்றிரண்டு பற்றி விமர்சனப் பாங்காக நான் எழுதியிருக்கிறேன் ஆயினும், அவரது கவிதைத் தொகுதியொன்றின் விமர்சனம் என்ற வகையில் இதுவே முதலாவது. சேரன் கவிதைகளை முன்னர் கா.சிவத்தம்பி அவர்கள் விமர்சித்து எழுதியதையும், அதனையொட்டிப் புதுசு (யாழ்ப்பாணம்) பத்திரிகையில் வந்த மறுவிமர்சனமும் கவிதை விமர்சனம் எவ்வளவு தூரம் அகநிலைச் சார்புடையது என்பதை உணர்த்தக்கூடும். என் விமர்சனத்திலும் அகநிலைச் சார்பு இருக்கும் என்பது மறுக்கமுடியாதது. ஆயினும் அது சேரனுடைய சமுதாய, அரசியல், இலக்கியப் பார்வைகளின் வெளிப்பாட்டுடன் என் விமர்சன விழுமியங்கள் முரண்படுவதை மட்டுமே பிரதிபலிக்கும் என்பது என் எதிர்பார்ப்பு.

தமிழில் புதுக்கவிதையின் விருத்தி, யாப்பிலக்கண விதிகளின் மறுதலிப்பாக மட்டுமன்றிப் பலரது புதுக்கவிதைகளிலும் கவித்துவத்தின் மறுதலிப்பாகவும் அமைந்துவிட்டது. இதன் விளைவாக புதுக்கவிதையே இலக்கிய விமர்சகர்கள் பலரது கடுந் தாக்குதலுக்கு உள்ளானது. தமிழுக்குப் புதுக்கவிதையோ அதன் பல்வேறு வடிவங்களோ அவசியமா என்ற விவாதத்துக்கு இங்கு அவசியம் இல்லை. எந்தக் கவிதை வடிவமாயினும் அது கவிதையின் வாகனமாக உள்ள அளவிற் பயனுள்ளதே. கவிதை எழுதுவோர் அந்த வாகனத்தைச் சரியாக அறிந்து பயன்படுத்தும்போது கவிதை வலிமையும் வேகமும் பெறுகிறது. கவிதையின் வெற்றி கவிதையின் உள்ளடக்கத்திலேயே தங்கியுள்ளது என்பதை உணராமல் ஒருகாலத்தில் யாப்பிலக்கண விதிகளுக்கமைய வார்த்தைகளை அடுக்கி மரபில் வந்து அலுத்துப்போன உவமான உவமேயங்களை எல்லாம் கவிதை என்று மயங்கிய காலமொன்று இருந்தது. அப்போக்கு இன்னமும் மரபுக் கவிதைத் துறையினின்று போய்விடவில்லை. புதுக் கவிதையோ பெரும்பாலானவர்கட்குப் புரியாத புதிராக அதிபுத்திசாலித் தனமான ஒரு வசனத்தை (சிலவேளை இரண்டை)ப்

www.tamilarangam.net

நூற்றுக்கணக்கான கிலோ எடையுள்ள குண்டுகள் மக்கள் குடியிருப்புகள்மீது போடப்பட்டனவோ. எவரது ஆணையின்பேரால் கிழக்கே வாவிகள் எங்கும் பிணங்கள் மிதந்தனவோ. யாருடைய வழிகாட்டலின் பேரில் தெற்கே கிராமங்கள் தோறும் பிணங்கள் மலைகளாகக் குவிக்கப்பட்டனவோ. அந்த அமைச்சரின் மரணம் எந்தவகையிலும் மக்களுக்கு கவலைதரப் போவதில்லை.

இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்தபிறகு சில தமிழ் அரசியற் குழுக்கள் அமைச்சருக்கு அநுதாபம் தெரிவித்த விதம் தமிழ் மக்களையே தலைகுனிய வைப்பது. அமைச்சர் தமிழர்களை மதிப்பவர் என்ற ரீதியில் படம்காட்ட முனைவது இந்த அரசியற் குழுக்களின் வரலாற்றுத் துரோகத்தையே காட்டுகிறது.

இவ்வாறான குழுக்களால் எமது போராட்டம் விலைகூறி விற்கப்படுவதை அனுமதிக்க முடியாது. எமது தாயகத்தின் இருண்ட சூழலில் எதிர்காலம் பற்றிய ஒளிக்கீற்றுகளைக் காட்டவேண்டியது ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழும் சிந்தனையாளர்களது கடமையாகும்.

எதிர்காலம் ஒளிமயமாகும் என்ற நம்பிக்கையும். மக்கள் சக்தியின்மீது உறுதியான பற்றுதலும் கொண்டவர்கள். பிழைப்புவாத அரசியலுக்காக மக்களை விற்பவர்களை நிரந்தரமாகவே மக்களிடம் இருந்து அந்நியப்படுத்த வேண்டும். தேசத்தையும் மக்களையும் உண்மையாகவே நேசிப்பவர்கள். தம்மிடையே ஐக்கியத்தை வளர்த்துக்கொள்ள வேண்டியது இன்றைய சூழலில் முக்கியம் பெறுகிறது.

– சுவடுகள் மாசி 1991 –

'Suvadukal' – Herslebsgate 43, 0578 Oslo 5, Norway

சுவடுகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

தாயகத்தில் தொடரும் யுத்தம் தனது கொடூரநிலையை எய்தியுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் பல இலட்சக்கணக்கில் அகதிகள் தங்கள் உடைமைகளை இழந்து அகதிமுகாங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

வாழ்வின் முக்கிய அம்சங்கள் அனைத்தையும் இழந்து ஒரு சந்ததியை வீதியில் நிறுத்தியுள்ளது இந்த யுத்தம். இலங்கையின் நெற்களஞ்சியம் என வர்ணிக்கப்பட்ட கிழக்கில், மக்கள் பசியாலும் யுத்தத்தாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டு முன்னெப்போதும் இல்லாத அளவில் அவலமுறுகின்றனர். வடக்கே அரசு தனது பொருளாதாரத் தடையை மிகமோசமான முறையில் அமுல்நடத்துகிறது. எல்லாவித அத்தியாவசியப் பொருட்களையும் தடைமுகாங்களைத் தாண்டிச் செல்லாதவாறு பார்த்துக்கொள்கிறது அரசு.

குறிதவறிய இலக்குகளையே தாக்கும் குண்டுவீச்சு விமானங்களின் சத்தத்திடையே, கொழும்பில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு பாதுகாப்பு அமைச்சரைப் பலியெடுத்திருக்கிறது. இனவாத அரசுக்கு முக்கிய நபராக விளங்கிய அமைச்சரின் கொலைக்கு யார் பொறுப்பாய் இருப்பினும், அந்த மரணம்பற்றிக் கவலைப்பட அவசியமில்லை. எந்த அமைச்சரின் ஆணையின்பேரால் வடக்கே

www.tamilarangam.net

கொழும்புக் குழுக்கள் சில எதிர்த்து அறிக்கைவிட்டுள்ளன. இவ்வாறான பல்வேறு வகையான குழப்ப நிலைகளிலேயே மக்கள் தற்போது வாழ்கின்றனர். எதற்காக விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்ற கேள்வியைக் கேட்கவேண்டிய நிலையிலும், ஏன் இது, இப்படித் தொடர்கிறது என்ற கேள்விகள் எழும் நிலையிலுந்தான் போராட்டம் தொடர்கிறது".

"நவம்பர் 87முதல் தமிழ்ப் பகுதிகளில் நிகழ்ந்த மனித உரிமைமீறல்களை மிகுந்த கவனத்துடன் Broken Palmyra ஆசிரியர்கள் பதிவாக்கியுள்ளனர். இந்த நூலுக்கு Broken Palmyra என்ற பெயர் மிகவும் பொருத்தமுடையதாகும். Broken Palmyra (முறிந்த பனைமரம்) என்ற பெயரில், பனைமரம் யாழ்த் தமிழர்களின் கடினங்களுக்கு இடையிலான உறுதியான வாழ்வு எவ்வாறு உருக்குலைகிறது என்பதன் குறியீடாகவே இந்தப் பெயரை உணரமுடிகிறது.

எமது மண்ணில் இருந்து பலர் தப்பியோடிய போது, எமது மக்களின் அவலங்களுக்கு இடையே தப்பியோட விரும்பாமல் அந்த அவலங்களில் பங்குகொள்வதைத் தனது வாழ்வாகத் தேர்ந்த ராஜனியை யாழ்ப்பாணம் பெற்றெடுத்த 'உயர்மகள்' (Great daughter) என கலாநிதி பிறையன் செனிவரத்ன தனது முன்னுரையில் கூறியுள்ளார். அந்த உயர்மகள் எதற்காகக் கொல்லப்பட்டாள் என்பது நம் அனைவர் முன்னும் உள்ள கேள்வியாகும்"

சமுத்திரனின் உரையைத் தொடர்ந்து நோர்வேஜிய மனித உரிமைகள் அமைப்பின் இயக்குநர் அஸ்பியோன் எய்ட உரையாற்றினார்.

மூன்றாம் உலகநாடுகளில் மனிதவுரிமை மீறல்கள் பற்றிய தனது அனுபவத்தினூடாக இலங்கைபற்றிய தனது எண்ணங்களை அஸ்பியோன் விபரித்தார். 'சாத்வீக மொழி'யைப் பலரும் புரிந்துகொள்ளத் தவறுவது பல துயரங்களுக்குக் காரணமாகிறது என்ற அவர், வெளிநாட்டவரைப் பொறுத்தவரை ஒரு சொர்க்கத் தீவான இலங்கையின் கடந்த தசாப்த நிகழ்வுகள் நோர்வே மக்கள் பலரைக் கவலைப்படுத்தியுள்ளது என்றார்.

தமிழ் மக்கள், ஒரு ஜன்நாயக நாட்டில் திட்டமிட்டுப் புறக்கணிக்கப் பட்டமையும், அதற்கு தமிழர்களிடம் இருந்து கிளர்ந்த எதிர்ப்புகள் ஆயுதமுனையில் மழுங்கடிக்கப் பட்டமையும் இன்றைய யுத்தசூழ்நிலைக்கு காரணம் எனினும், இதுமிகவும் கவலையே தருகிறது என்றார் அவர்.

1983க்கு முந்தைய இலங்கைபற்றிய ஆய்வொன்றைத் தாம் படித்ததாகக்கூறிய அஸ்பியோன், நடைமுறையில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவோர் இன, மதரீதியில் பாகுபாடு காட்டி நடக்க முயன்றால் அதன்விளைவாக பாதிக்கப்படுவோர் தவிர்க்க முடியாமல் நடைமுறையிலுள்ள சட்டத்தையும் ஒழுங்கையும் நம்பமுடியாது போகிறது. இதனால் பாதிக்கப்பட்டோர் வன்முறையை நாடும் நிலை உருவாகிறது என்பதை அவ்வாய்வின் மூலம் தாம் அறிந்து கொண்டதாகக் கூறினார்.

1983இல் இலங்கையில் நடந்த இனப்படுகொலைபற்றி தமது அமைப்பு, தமது தலைமை அமைப்பான மனித உரிமைகட்கான ஐ.நா.ஆணைக்குழுவில் இலங்கைபற்றிய நிலைமை ஆராயப்பட வேண்டும் எனவும், வெலிக்கடைப் படுகொலைகளுக்கு காரணமானோர் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றியதை அவர் நினைவுபடுத்தினார்.

(இன்னும் வரும்)

www.tamilarangam.net

# இறந்தும் நினைவில் இருக்கும் ஒரு விடிவெள்ளி

வைத்திய கலாநிதி ராஜனி திரணகம நினைவாக சுவடுகள் பதிப்பகத்தினர் நிகழ்த்திய ஒன்றுகூடல் 30.09.90 தொய்யன் Samfunnshuset இல் நிகழ்ந்தது. ஆரம்பத்தில் கடந்த காலங்களில் ஈழத்தில் உயிரிழந்த அனைவருக்குமாக மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

"இப்போதாவது மனித உரிமைகளுக்காக நாம் குரல் கொடுக்காவிட்டால் எப்போதுமே எமது சந்ததியைக் காப்பாற்ற இயலாது போய்விடும் என்ற துயரச் செய்தியை ராஜனி தனது மரணத்தின்மூலம் விட்டுச் சென்றுள்ளார்" என தனது ஆரம்ப உரையில் குறிப்பிட்ட விஜயேந்திரன், "அடிப்படை மனித உரிமைகளுக்காகப் போராட வேண்டிய அவசியத்தை இன்றைய சூழல் எமக்கு ஏற்படுத்தியிருக்கிறது" என்றார்.

"ராஜனியின் மரணம் மூலம் தமிழ்மக்கள் தமது பாதுகாப்புபற்றி அச்சங் கொண்டுள்ளனர். ஆனால், பாதுகாப்புடனும் வசதிகளுடனும் வாழும் நாம் இவ்வாறான கூட்டங்கள்மூலம், அந்தப் பாதுகாப்பு சிறிதளவிலாவது இருப்பதையும், நம்பிக்கையையும் மக்களுக்குக் காட்ட முடியும்" என்றார் அவர்.

தொடர்ந்து கூட்டத்தைப் பேராசிரியர் ந.சண்முகரத்தினம் (சமுத்திரன்) நடத்தினார். சமகால அரசியல் சூழல்பற்றிய பின்னணியுடன் ராஜனியின் வாழ்வு, பணி, அவரும் மற்றும் மூன்று




விரிவுரையாளர்களும் சேர்ந்து எழுதிய 'Broken Palmyra' நூல் என்ற பலவிடயங்களை சமுத்திரன் ஆராய்ந்தார்.

"அண்மையில் நான் இலங்கை சென்றிருந்தேன். அங்கு ஒரு குழப்பமான அபிப்பிராயம் நிலவுகிறது. தற்போது ஆரம்பமாகியுள்ள யுத்தம் ஏன் தொடங்கியது? பேச்சுவார்த்தைகள் ஏன் முறிவடைந்தன? என்பதுபற்றி அநேகமானோர் குழம்பியிருக்கிறார்கள்.

மறுபுறத்தில் தமிழ் ஆயுதக் குழுக்களால் முஸ்லீம் மக்கள்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது, படுகொலைகளும் நிகழ்கின்றன. இதை நிறுத்தும் துணிவில்லாமல் தமிழ்ப் பகுதிகளில் தமிழர்கள் வாழ்கின்றனர்.

www.tamilarangam.net




சுவடுகள் விளம்பர விகிதம்
பின் அட்டை 400 NKR
உள் அட்டை 350 NKR
முழுப் பக்கம் 250 NKR

சுவடுகள் சந்தா விகிதம்
நோர்வே, சுவீடன், டென்மார்க் 300 NKR
ஐரோப்பிய நாடுகள் 400 NKR
ஏனைய நாடுகள் 500 NKR
வங்கிக் கணக்கிலக்கம் 160752 16032

SUVADUHAL
Herslebs Gate 43
0578, Oslo 5

<u>சேதி</u>

சூரியனும் தாகத்தோடு
வானின் உள்ளே
ஒளிந்து கொண்டான்.
கடல் தாயும் கலங்கி
சிலையாக உறைந்து விட்டாள்.
குளிர்காற்றுக்கூட எனைப்
பெருமூச்சாய்க்
கடந்து செல்ல...
நோகும் விழிகளுடன்
சேதி சொல்லக் காத்திருப்பேன்.
- வயவைக்குமரன் -
(15.10.90)

* *அட்டைப் படம்:*

Henning Kramer Dahl
*நன்றி:* Amnesty Nytt

இந்த இதழ் மிகுந்த காலதாமதமாகவே வெளிவருகிறது. இதற்கு முக்கிய காரணம், போதியளவு தரமான ஆக்கங்கள் கிடைக்காமையே. வாசகர்கள் தமது தரமான படைப்புகளை அனுப்புமாறு வேண்டுகிறோம்.

இந்த இதழில் இடம்பெற வேண்டிய சில படைப்புகள் உரிய காலத்தில் கிடையாமையால் அவை பிரசுரமாகவில்லை.


சுவடுகளின் சந்தாவைப் பலர் இன்னும் செலுத்தவில்லை. தனித்தனியே நினைவுபடுத்தும் அவசியத்தைத் தவிர்த்து உடன் சந்தாவைச் செலுத்துவீர்கள் என நம்புகிறோம்.

சுவடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்